# வியட்காங் போர் நிறுத்தத்துக்கு நிபந்தனையுடன் சம்மதம்

Registered as a News paper in C ylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 209
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 24 ஐ: ஆகிர் 26 செவ்வாய்க்கிழமை [9-9-69]

அண்ணா கோப்பி

நல்லூர் கோவிலுக்கு முன்பாக உள்ள மில்க்வைற் சோப் காட்சி சாலையில் எமது தயாரிப்புகளாகிய

★ அண்ணா கோப்பி
★ அண்ணா பற்பொடி
★ அண்ணா பத்தி

ஆகிய பொருட்களை மலிவாய் பெற்றுக்கொள்ளலாம். அதோடு ஓர் பிளாஸ்டிக் பாக்கையும் இனமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

சைகோன், செப். 8

அதிபர் ஹோ-சி-மின் மரணம் காரணமாக வியட்காங்கியர் அறிவித்த மூன்று நாள் போர்நிறுத்தத்தை அமெரிக்காவும் தென்வியட்னாமும் நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டுள்ளன.

எதிர் தரப்பின் போர் ஆயத்தம் செய்ய அவகாசம் இன்றியே தாக்குதல் நடத்தத் தொடங்கும் பட்சத்தில் திரும்பச் சுடுவதற்கு ஆயத்தமாய் இருக்கும்படி தமது படைகளுக்கு இந்த நாடுகள் உத்தரவிட்டுள்ளன.

வடவியட்னாம் படைகள் இன்று அதிகாலை தமது மூன்று நாள் போர் நிறுத்தத்தை ஆரம்பித்தார்கள் டாக்டர் ஹோ-சி-மின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இந்த போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுகின்றது

வியட்னாம் தகராறு சுமுகமாக வெளியார் தலையீடு இன்றி அமைதியாக முடிவுற வேண்டுமென்றே இந்தியா விரும்புவதாக இந்தியா வெளிநாட்டு மந்திரி திரு தினேஷ்சிங் கல்கத்தாவில் நிருபர்களிடம் கூறியிருக்கிறார் டாக்டர் ஹோ-சி-மின் மரணச் சடங்குகளில் இந்தியாவின் சார்பில் கலந்துகொள்வதற்கு ஹனோய் செல்லும் வழியில் திரு தினேஷ்சிங் கல்கத்தாவில் நிருபர்களிடம் பேசினர்

சோவியத் பிரதமர் திரு கொஸிஜின் ஏற்கனவே ஹனோய் போய்ச் சேர்ந்திருக்கிறார்

## முசலிப்பிரிவு விளையாட்டு போட்டி

முசலி, திங்கள்

முசலிக்காரியாதிகாரி பிரிவின இரண்டாவது வருடாந்த விளையாட்டுப் போட்டியை இம்மாத இறுதியில் நடத்துவதற்கான ஆயத்தங்களை பிரிவுகாரியாதிகாரி திரு வை சொக்கலிங்கம் செய்து வருகிருர்

இவ் விளையாட்டு விழாவுக்கு விளையாட்டு அமைச்சின் பிரதம அதிகாரி டாக்டர் எச் எஸ் ஆர் குணவர்தன பிரதம அதிதியாக அழைக்கப்பட விருக்கிருர்

இவ் விளையாட்டு விழாவில், நீச்சல்போட்டி, இருபத்தைந்துமைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி, விநோத உடைப் போட்டி, ஆகியன நடைபெற விருக்கின்றன

இப்போட்டிகள் யாவும், முசலிக்காரியாதிகாரி, கிராமசேவையாளர் பிரிவு அடிப்படையிலே நடாத்தப்பட்டு, சிறந்த கிராமசேவையாளர் பிரிவுக்கு, நாஞட்டான் மேற்கு இராமச்சபை உவந்தளித்த வெற்றிக் கிண்ணம் பரிசளிக்கப் கடும்.

ஐரோப்பிய நாடுகளில்

## இஸ்ரேலிய தூதரகங்கள் தாக்கப்பட்டன

லண்டன், செப். 8

ஹொலண்ட், பிரேசில், பெல்ஜியம், மேற்குஜேர்மனி ஆகிய இடங்களிலுள்ள இஸ்ரேலிய தூதரகங்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக இரு அராபிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அராபிய கொரில்லாப் படையைச்சேர்ந்தவர்கள் எனச்சந்தேகிக்கப்பட்டுள்ளது.

நோயாளர் விடுதி

## கட்டிலில் படுத்திருக்கையில் எதிரிகுத்தி காயப்படுத்திஞர்

மல்லாகம், திங்கள்

''என்னுடன் கூடவருகிருயா என விஞவிய எதிரியை நோக்கி மறுப்புத் தெரிவித்ததை யடுத்து ஆஸ்பத்திரி நோயாளர் விடுதி கட்டிலில் படுத்திருக்கையில் எதிரி கத்தியால்குத்திக்காயப்படுத்திஞர்.'' இவ்வாறு வீ பிலோமினு என்ற 19 வயது இளம்பெண் மல்லாகம் நீதிபதி திருஎஸ் ஆனந்த குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு ஒன்றின் போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்

சாட்சி பிலோமினுமேலும் குறிப்பிட்டதாவது:- சம்பவ தினம் காலையில் பழச்சாறு அருந்திவிட்டு கிளாஸ், கத்தி கழுவ குளிக்கும் அறைக்கு சென்றுவிட்டு வாட்டிற்கு திரும்பிவந்தேன் வரும்போது எதிரி என்னை தடுத்து மறித்து தன்னுடன் கூடவருமாறு அழைத்தார் நான் மறுத்து விட்டு செல்லுகையில் எதிரி கலைத்து வந்து கத்தியைப் பறித்து இழுத்துக் கொண்டு ஓடிஞர் பின்னர் சிறிது நேரம கழித்து வார்ட்டிற்குள் வந்து கட்டிலில் படுத்திருந்த எனக்கு கத்தியால் குத்திஞர்.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போது எதிரி கையில் வைத்திருந்த ஏதோ திராவகத்தை குடித்து விட்டு கத்தியால் குத்தியதாக பொலிசுக்கு கூறியதை சாட்சி ஒப்புக்கொண்டார்.

இவ்வருடம் மே] மாதம் 22-ம் திகதி இளவாலையைச் சேர்ந்த பிலோமினு வேதநாயகம்என்பவருக்கு காயம் விளைவித்ததாக மொகமெட் அலிகான் எபவருக்கு எதிராக இவ்வழக்கு காங்கேசன் துறைப் பொலிசாரால் தொடரப்பட்டுள்ளது.

எதிரிசார்பில்வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராஞர்.

## சுங்க காரியாலய துணிகரக் கொள்ளை

# கொழும்பு உயர் அதிகாரிகள் யாழ். நகரில் ரகசியவிசாரணை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சுங்க காரியாலயத்தில் நடைபெற்ற துணிகர கொள்ளை சம்பந்தமாக விசாரணைநடத்தவென கொழும்பிலிருந்து இங்கு வந்த சுங்க, பொலிஸ்பகுதிகளின் உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் சுங்கஅதிகாரிகளுடன் நேற்று சுமார் 3 மணி நேரம் இரகஸிய பேச்சுவார்த்தை நடத்திஞர்கள்.

தகவல் பகுதி உதவி பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. டெகிலிஸ்வப்பு, சுங்கப்பகுதி டெப்பியூட்டி கலக்டர் திரு. வார் சில்வா ஆகிய இருவரும் கொழும்பிலிருந்து இதற்கென வந்திருந்தார்கள், யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவி பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு எஸ். ஐ. அசீஸ், சுங்கசப்கலக்டர் திரு. செனிவரத்ன ஆகியோர் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சுங்க காரியாலயத்தைச் சேர்ந்த பலஊழியர்கள் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரவீதிகளில் அலையும் பன்றிகள்சுட்டுகொல்லப்படும்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் பகிரங்கமாக வீதிகளில் பன்றிகள் காணப்பட்டால் அவைகள் பிடிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்படும் என்று யாழ் நகர சுகாதாரவைத்திய அதிகாரி பகிரங்க அறிவித்தல் ஒன்று விடுத்துள்ளார்

இந்தத் திடீர் உத்தரவு இம்மாதம் 1ம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு பிடிக்கப்படும் பன்றிகளை வளப்பவர்களுக்கும் 50 ரூபாவுக்குக் குறையாமல் நீதிமன்றத்தில் அபராதமும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக வைத்திய அதிகாரி திரு வி நடராசா யாழ் நகரில் பன்றி வளர்ப்பவர்களுக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கை அறிவித்தலில் தெரிவித்திருப்பதாவது:

வீதியில் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவிப்பதும், நகரின் வீதிகளை அசுத்தமாக்குவதுமான பன்றிகளை வளர்ப்பவர்கள் அவற்றைத் தமது வளவுக்குள் கட்டி வைத்து வளர்க்குமாறு வேண்டப்படுகிருர்கள். பொது இடங்களில் பன்றிகள் காணப்பட்டால் அவை பிடிக்கப்பட்டு சுட்டுக் கொளலப்படும் அல்லது அழிக்கப்படும். அத்துடன் அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக மாநகர கட்டளைச் சட்டத்தின்படி நீதி மன்றம் மூலம் 50 ரூபாவுக்குக் குறையாமல் அபராதமும் விதிக்கப்படும்.

(கா நி)

ஆனையிறவு தடை முகாமில்

## வாகனங்களை சோதனையிட பொலிஸ் சுப்பிரிண்டன்ட் உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்

அரசாங்க வாகனங்கள் உட்பட சகல வாகனங்களையும் ஆனையிறவு தடை முகாமில் சோதனை போடுவதோடு, வாகனங்களின் இலக்கங்களையும் பதிய வேண்டும் என்று ஆனையிறவு பொலிஸாருக்கு வட பகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் சுங்க காரியாலய கொள்ளையைத் தொடர்ந்தே இந்தத் துரித நடவடிக்கையை பொலிஸ் சுப்பிரிண்டன் மேற்கொண்டார்.

இராணுவ, பொலிஸ், கடற்படை, சுங்க, அரசாங்க வாகனங்கள் உட்பட சகல வாகனங்களும் பரி

(4-ம் பக்கம் பார்க்க)

## புலவர் கோவிந்தனின் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் புலவர் கா. கோவிந்தன் இன்றுநண்பகல் யாழ்ப்பாணம் வருகின்றூர்

இன்று மாலை 3-30 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரி முன்றலிலும் இன்றிரவு 6 மணிக்கு நகர மண்டபத்தில் சொற்பொழிவாற்றுவார் இரவு 7-30 மணிக்கு பருத்தித்துறையில் ஆலடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் செந்தமிழ் செல்வர் நா கதிரவேற்பிள்ளை என்னும் நூலையும், வெளியிட்டு

## 'வன்னியசிங்கம் சிலை ஏன் நிறுவப்படவேண்டும்?'

### எஸ். ஜே, வி. விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக வைத்திய அதிகாரி திரு. வி நடராசா யாழ் நகரில் பன்றி வளர்ப்பவர்களுக்கு விடுத்

கட்டளைச் சட்டத்தின்படி நீதிமன்றம் மூலம் 50 ரூபாவுக்குக் குறையாமல் அபராதமும் விதிக்கப்படும். (கா நி)

கம் நேற்று உத்தரவிட்

(4-ம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவில் ராணுவம் பொதுமக்கள் கைகலப்பு

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலைவிழாவில் நேற்றிரவு பலத்த கைகலப்பு ஏற்பட்டதாக அறிவிக்கப் படுகிறது இதில் இராணுவ சிப்பாய்களும், பொதுமக்களும் மோதிக் கொண்டதாகத் தெரிகிறது.

கைகலப்பில் படுகாயமுற்றதாகக் கூறப்படும் கரைச்சிக் குடியிருப்பைச் சேர்ந்த கார்த்திகேசு கணபதிப்பிள்ளை என்பவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார் இது சம்பந்தமாக உடனடி விசாரணை நடத்தும்படி காயமுற்றவரின் தந்தையாரான மரியாம்பிள்ளை கார்த்திகேசு வடபகுதி பொலிஸ்சுப்ரின்டனிடம் புகார் செய்துள்ளார் முல்லைத்தீவு பொலிசில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், இவ்விசாரணையை வேறு பொலிஸ் நிலையத்தில் நடத்தும்படியும் அவர்தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும், வவுனியா எம் பிக்கும் தந்தி மூலம் தெரிவித்துள்ளார்

——

## 7 மாடி காரியாலயம் நிறுவப்படும்

காலி, திங்கள்

இங்கு ஏழு அடுக்குமாடி கட்டிடமொன்று அரசாங்க காரியாலயமாகச் செயல்பட நிறுவப்படவிருக்கிறது இக்கட்டிடத்தை நிறுவுவதற்கா காலி மாநகரசபையின் பழைய அலுவலகம் இடிக்கப்படுகிறது இம்மாதம் 16ம் திகதி காலிக்கு விஜயம் செய்யும் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா இக்கட்டிடத்துக்கான அடிக்கல்லை நாட்டுவார்

## மேலும் மூவருக்கு மரண தண்டனை

பாக்தாத், செப். 8

ஈராக்கில் மேலும்மூவர் உளவு பார்த்த குற்றத்துக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே 50 பேருக்கு மேற்பட்டவர்கள் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் உளவு பார்த்ததாக இவ்வருடம் மரணதண்டனைபெற்றுர்கள்,

——

## காலமானுர்

யாழ்ப்பாணம் செவ்வாய்

வேதசிவாகமப் பண்டிதர் சிவ ஸ்ரீ நா நடராசக்குருக்கள், நேற்றையதினம் காலமாகிவிட்டார் இவர் மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் பல்லாண்டுகள் பணியாற்றினுர்.


# திருமண அழைப்பு

மணமகன்: நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

[பொருளியல் விரிவுரையாளர் இலங்கைப் பல்கலைக்கழகம்,பேராதனை]

மணமகள்: செல்வி சி. மகேஸ்வரி

இடம்: 'கணபதி' அச்சுவேலி தெற்கு அச்சுவேலி.

காலம்: 12-9-69 வெள்ளிக்கிழமை மாலை 6-28 முதல் 8-03 மணி வரை.


உறவினர்களும், நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

க. சின்னத்தம்பியும்

[இளைப்பாறிய மாவட்ட புகையிரதக் கட்டுப்பாட்டதிகாரி மலேசியா]

பாரியாரும்.

அச்சுவேலி. 1735

அப்பல்லோ - 11 வீரர்கள் சந்திரனில் தம் சேய்கலத்தை வெற்றிகரமாக இறக்கிய பின்னர் அதில் சென்ற இருவரில் ஒருவர் கலத்திலுள்ள ஓர் ஏணியின் வழியே சந்திரத்தரைக்கு இறங்குவதை இப்படம் காட்டுகின்றது.

காந்தி கொடி விற்பனை

# யாழ். மாவட்டத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்

காந்திநூற்றுண்டுவிழாவை யொட்டிய கொடிதின விழா இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றிலிருந்து இம் மாதம் 11-ம் திகதிவரை இக்கொடி விற்பனை இங்கு நடைபெறும்

இம்மாதம் 19-திகதி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் காந்தி நூற்றுண்டுவிழா கொடிவிற்பனை நடைபெறும்

இது சம்பந்தமாகக்காந்தி சேவா சங்கம் விடுத்திருக்கும் வேண்டுகோள் ஒன்றில் பொதுமக்களையும், மாணவர்களையும், வர்த்தகர்களையும் இக் கொடிவிற்பனைக்கு பூரண ஆதரவு கொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. (கா. நி)

——

## நெல்உற்பத்தி போட்டி

வேருவளை, திங்கள்

களுத்துறை மாவட்டத்திலுள்ள 6 காரியாதிகாரி பிரிவுக்குமிடையே நெல் உற்பத்தியில் போட்டி நடத்துவதற்காக ஆயத்தங்கள் நடைபெறுகின்றன வெற்றி பெறும் பகுதிகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## யாழ். உதவிமேயருக்கு புதிய நியமனம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி கமிட்டியின் ஒரு உறுப்பினராக யாழ். உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் நேற்று தொடக்கம் சுகாதார அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

——

## சோவியத் திரைப்பட விழா இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சோவியத் திரைப்பட விழாவில் இன்று மாலை லெனின் கதைகள் என்ற தமிழ்ப்படம் காண்பிக்கப்படும்.

இலங்கை சோவியத் நட்புறவுச்சங்கத்தின் வடபகுதி கிளையினர் இந்த திரைப்பட விழாவை நடாத்துகின்றனர்

றுவார் இரவு 7-30 மணிக்கு பருத்தித்துறையில் ஆலடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் செந்தமிழ்ச் செல்வர் நா கதிரவேற்பிள்ளை என்னும் நூலையும் வெளியிட்டு வைப்பார்

இரவு 9 மணிக்கு மாதகலில் நடைபெறும் திருவள்ளுவர் விழாவிலும் பேசுவார். (கா. நி)

# 'வன்னியசிங்கம் சிலை ஏன் நிறுவப்படவேண்டும்?'

## எஸ். ஜே, வி. விளக்கம்

மல்லாகம், திங்கள்

''தமிழ் இனத்தின் விடுதலைக்கும், பாதுகாப்புக்கும் அமரர் வன்னியசிங்கம் பெருந் தொண்டாற்றியதுடன் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறை கொண்டிருந்தார். சமபந்திபோசனம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தீண்டாமை ஒழிப்பில் தீவிர கவனம் செலுத்தினுர். யாழ். நகரில் வன்னியசிங்கம் சிலை இக்காலகட்டத்தில் நிறுவப்படுவது மக்களின் மனதில் இவரின் இலட்சியம் கருத்துக்களை ஆழமாக பதிய வைக்க உதவுவதாக முடியும் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தீவிரமாக செய்யப்பட்டு வரும் இவ்வேளையில் அமரர் வன்னியசிங்கம் கொண்டிருந்த கருத்துக்கள் மக்கள் மத்தியில் உபதேசிக்கப்படுதல் அவசியமானது வன்னியசிங்கம் சிலை அமைக்கப்படுவது குறித்து சிலரிடையே கருத்து வேறுபாடு, எதிர்ப்பு எழுந்திருப்பது மன வேதனைக்குரியது. சிலை அமைக்கப்படும் முயற்சி வரவேற்கத்தக்கது இம்மாதம் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடாத்தப்படவிருக்கும் வன்னியசிங்கம் நினைவு தினக் கூட்டங்கள் மூலம் சாதிஒழிப்பு பிரசாரம் செய்யப்படும்''

தமிழரசுத் தலைவரும் காங்கேசன்துறை எம்.பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:-

தமிழரசுக்கட்சியின் ஆரம்ப கால இலட்சிய, கொள்கைகள் இதுவரை கைவிடப்படவில்லை அரசாங்கத்தில் அங்கம் வகித்த நேரத்திலும் சரி அல்லது வெளியேறிய போதும் தமிழ் மக்களை எவ்வித்திலும்காட்டிக்கொடுக்கவில்லை. தமிழ் மக்கள் எம் கட்சியின் மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளனர், தமிழ் இனத்தின் விடுதலைக்கு நாம் தொடர்ந்து போராடுவோம்.

கிழக்கு மாகாணம் கல்வித் துறையில் அதிக முன்னேற்றமடையவில்லை. வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து உயர்தர கல்விபெறும் தமிழ் மாணவர்கள்பெரிதும் கஷ்டமடைகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொதுவான இடமான ருதிமலையில் பூரணத்துவம் வாய்ந்த தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைக்கப்படுவது அவசியம்.

இலங்கையில்

# ''தி. மு. க. பூச்சாண்டியை இல்லாமல் செய்யுங்கள்''

## புலவர் கோவிந்தனிடம் அண்ணுமலை எம். பி. வேண்டுகோள்

வெள்ளவத்தை, திங்கள்

''சிறுபான்மை இனத்தவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்களுக்குக் கஷ்டங்கள் அதிகந்தான். ஈழத் திருநாட்டிலே தி. மு. க. என்ருல் அது பேய் அல்லது பிசாசு என்று ஒருசாரார் பூச்சாண்டி காட்டிவருகிருர்கள். இங்கு வந்திருக்கும் தமிழக சட்டசபைத் தலைவர் திரு. கோவிந்தன், தாம் தாயகம் திரும்புமுன்னர் தி. மு. க என்ருல் பேய் பிசாசு அல்ல, அவர்களும் மனிதர்கள் தான், பண்புள்ளவர்கள் தான் என்பதை உணர்த்திவிட்டுச் செல்லவேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டுகிறேன்''

இவ்வாறு ஆட்சிமன்ற நியமன அங்கத்தவர் திரு. அண்ணுமலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தமிழக சட்டசபைத்தலைவர் புலவர் கே. கோவிந்தனுக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் எடுத்த வரவேற்பு விழாவில் பேசுகையில் கூறினுர்.

நீதியரசர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. அண்ணுமலை எம். பி. தொடர்ந்து பேசியதாவது: ''இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் மாறிமாறி வருகின்றன. ஆனுல் மக்களுக்குத்தான் விடிவு ஏற்படவில்லை. இலங்கையில் இருந்து தாயகம் திரும்பும் மலையகத் தொழிலாளர்களுக்குத் தமிழகத்தில் புனர்வாழ்வு தாருங்கள் என்று புலவர் கோவிந்தனை கேட்கிறேன். இங்குள்ள பாட்டாளிகளின் கஷ்டங்களை நேரில் உணர்ந்து தமிழகத்தில் அவர்களுக்கு உகந்த நல்ல திட்டங்களைச் செய்துதாருங்கள்.''

உடுப்பிட்டி எம். பி.யும், உப சபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் ''பாரதி முதல் பாரதிதாசன்வரையும் 'சிங்களத் தீவு' என்று இலங்கையைச் சொன்ஞர்கள். இனிமேல் வருகின்ற கவிஞர்களாவது இங்கே தன்மானமுள்ள தமிழர்களும் வாழ்கின்றுர்கள் என்பதை உணர்ந்து 'சிங்கள-தமிழ்த்தீவு' என்று சொல்லட்டும். தமிழக-ஈழத்து மக்களிடையே நல்லெண்ண ஒற்றுமைப் பாலம் நிலவப் புலவர் கோவிந்தனின் வருகை நல்வருகையாக அமையட்டும். சாதாரண நெசவுத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்துஉழைப்பினுல் உயர்ந்து இன்று சட்டமன்ற சபாநாயகர் வரை வந்திருக்கும் கோவிந்தன் உண்மையிலே யே பாராட்டப்பட வேண்டியவர்'' என்ருர்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் ''தமிழ் உயர்ந்த இடத்தைப் பெறவேண்டுமாயின் தமிழறிஞர்கள் உயரவேண்டும். ஈழத்தில் ஒரு தமிழ்ப் புலவன் சட்டசபைத் தலைவராக வரமுடியாது. அப்படித் தப்பித் தவறிக் காலைக் கையைப் பிடித்துவந்தாலும் அவன் தமிழ்ப் புலவனுக இருக்க முடியாது. ஏனென்ருல் காலைக் கையைப் பிடிக்கும் வழக்கம் தமிழ்ப் புலவனுக்கு இல்லை'' என்று சொன்ஞர்.

தருவாளர்கள் இ. சிவானந்தன், மு. வைரவபிள்ளை ஆகியோரும் பேசினர்.

புலவர் கோவிந்தன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் நியமன எம் பி. திரு. அண்ணுமலையின் வேண்டுகோளைத் தாம் ஏற்றுக்கொண்டதாகக் கூறினுர். திருக்குறளின் பெருமையையும் எடுத்துச் சொன்ஞர். திரு. இ. இரத்தினம் நன்றி கூறினுர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

மல்லிகா எலெக்ரிக்கல்ஸ் மின்சார ஒளியமைப்புக்கும், ஒலிபெருக்கியமைப்புக்கும் எம்மைத் தொடர்புகொள்ளவும். உரிமையாளர்: எம். எட்வேட் அய்யகுட்டி, 35/2 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 1388

### விற்பனைக்கு

இயக்கச்சியில் 2 வயது முதல் 7 வயதுவரையுள்ள தென்னை 45 ஏக்கரும் வயல் 5 ஏக்கரும் பஸ் பாதை. நேரிலோ கடித மூலமோ தொடர்புகொள்க. 68/5, புல்லாந்தி தோட்ட ஒழுங்கை, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். 1385

### தேவை

யாழ்ப்பாண பட்டினத்தில் ஓர் டாக்டரின் வைத்தியசாலையில் வேலைபார்க்க ஆட்கள் தேவை. பிணைப் பணம் கட்டக்கூடிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 1386 C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1386

யாழ். நகரில் பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றுக்கு அநுபவம் வாய்ந்தவரும், ஆங்கில அறிவுமுள்ள ஸ்ரோர்கீப்பரும், செக்கரும் தேவை. ஸ்ரோர்கீப்பர் ரூபா 1000/- பிணைப்பணம் கட்டவேண்டும். சகல விபரங்களுடன் விளம்பர இல. 1387, மேபா 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு கடித மூலம் விண்ணப்பிக்கவும். 1387


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 9—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன்ட் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-55 வீணை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 49 மீ**


''புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்''

ஏ. எவ். றேமண்ட்ஸ்,

147, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில் மனம்நிறைந்த

அந்திய சேவை ரூபா 175/-

உயர்தர பிரேதப் பெட்டிகள் ரூபா 50/-


## சனசமூக நிலைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செவ். விளையாட்டமைச்சினுல், யாழ். மாவட்ட சனசமூக நிலைய உதைபந்தாட்ட சாம்பியன்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் யாழ். விளையாட்டரங்கில் இம்மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கிறது

குருநகர் சனசமூக நிலைய கோஷ்டியும் - உடுப்பிட்டி காரியாதிகாரிக் கோஷ்டியும் 14-ம் திகதி முதலாவது போட்டியில் போட்டியிடுகின்றன. இரண்டாவது போட்டியில் 'றெக்கிளமேசன்' சனசமூக நிலையக் கோஷ்டியும் - கோப்பாய் காரியாதிகாரிக் கோஷ்டியும் மீண்டும் இரண்டாம் முறையாக மோதிக் கொள்ளுகின்றன. முதலில் நடைபெற்ற போட்டியில் இவ்விரு கோஷ்டிகளும் சமமான (3-3) கோல்களைப் பெற்றிருந்தனர். (தே. நி)

## நுவரெலியா வெற்றி

யாழ்ப்பாணம், செவ். அகில இலங்கை பொலிஸ் இலாகாவினுல், மாவட்ட பொலிஸ் கோஷ்டிகளிடையே, குருநாகலில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், யாழ்ப்பாணம் பொலிஸ் தெரிவுக் கோஷ்டியை நுவரெலியா பொலிஸ் தெரிவுக் கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றி பெற்றது. (தே. நி

## மெய்வல்லுனர் போட்டி

# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

ஆவணி மாதம் 24-ந் திகதி (9-9-69)

**மேஷம்-** எடுத்த காரியத்தில் வெற்றியீட்டுவீர்கள். அபிப்பிராய பேதங்கள் மறைந்து சுமுகமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் விருந்துபசாரத்துக்கும் இடமுண்டு தொழில்துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

**ரிஷபம்** இலாபகரமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். அதிர்ஷ்ட தேவதையின் பார்வை உங்கள் பக்கமிருக்கும். எதிர்பாராத முறையில் வருகை தரும் நண்பர் ஒருவர் உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டுவார்.

**மிதுனம்-** அதிகப் பேச்சு காரிய நஷ்டத்தில் முடிவடையும். நண்பர்கள் ஒதுங்கிக் கொள்ளுவார்கள். தனி வழியில் நாட்டம் பிறக்கும். சிறிய விடயத்துக்குக்கூட கோபம் சீறிவரும். அமைதி விரும்பத்தக்கது

**கடகம்-** எந்த விடயத்திலும் முன்னணியில் நிற்க வேண்டாம். பின்னணியில பிளவு ஏற்படுவதற்கு இடமுண்டு. நண்பர்களிடமிருந்தே குறை கேட்க நேரிடும் பெரியவர்களுடன் பகைத்துக்கொள்ளாதிருப்பது நன்று

**சிம்மம்-** கைநிறையப் பணம், நெஞ்சில் காதல் கனல் இன்று வாழ்க்கை இன்பகரமாக இருக்கும். குடும்பஸ்தர்கள் வாழ்வில் திருப்திகரமான நிலை தென்படும் வேண்டியதைச் சாதிப்பதில் இன்று வெற்றியடைவீர்கள்

**கன்னி-** வாழ்க்கை இருள்பட்டதாக இருக்கும் எதிலும் ஏமாற்றத்தின் சாயல் தென்படும் உள்வீட்டிலேயே உளவாளிகள் இருக்கலாம், எதையும் மிகவும் நிதானத்துடன் செய்யவும். தெய்வநம்பிக்கை வேண்டும்

**துலாம்-** அறிவுத்தாக்கத்தால் உந்தப்படுவீர்கள் ஆக்கப்பணிகளில் கவனம் செலுத்தப்படும். விளைபொருட்களிலும் விருத்திக்கிடமுண்டு. விஞ்ஞானத்துறையில் ஈடுபடுபவர்களுக்குப் புதிய உற்சாகம் பிறக்கும். நல்ல தினம்

**விருச்சிகம்-** வாழ்க்கை கன்னல் போல் இனிக்கும் அயலவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் இன்று புதிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படலாம். பிள்ளைகளின் நடவடிக்கைகளும் பெருமையைத்தரும்

**தனுசு-** கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். திட்டமிட்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சில தீய சக்திகள் முனையக்கூடும். நிம்மதியற்ற நிலையில் தவிப்பீர்கள். எதையும் தாங்கும் இதயம்வேண்டும்

**மகரம்-** குடும்பஸ்தர்களுக்கு இன்று பொன்னுனதினம் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். சமாதான நடவடிக்கைகள் மூலம் எதையும் நல்ல முடிவுக்குக் கொண்டுவருவீர்கள். வெற்றி உங்கள் பக்கம்


**கும்பம்-** உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். இதன் மூலம் வைத்திய செலவுகளுக்கும் இடமுண்டு. ஆசைகாட்டி ஏமாற்றுவதற்கு ஒருவர் முனையக்கூடும். முகமன் கூறுவோர் விடயத்தில் அதிக எச்சரிக்கையுடன் இருக்கவும்

**மீனம்-** எதிர்த்தவர்களையும் உங்கள் பக்கம் திருப்புவதில் இன்று வெற்றிகாண்பீர்கள். ஆத்மீக விடயங்களில் அதிக நாட்டம் ஏற்படும். மதத்தலைவர் ஒருவர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார். சுபதினம்

# சேவைவசதி கட்டணம்பற்றி அதிபர்களுக்கு சுற்றறிக்கை

பருத்தித்துறை, திங். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பாடசாலைகளில் மாணவரிடம்சேவை வசதிக் கட்டணம் வசூலிக்கும்முறை பற்றியும் அப்பணம் செலவிடப்படும் முறைகள் பற்றியும் பெற்றூர் ஆசிரியர் சங்கங்கள் முறைப்பாடு செய்க ... ரியர் சங்கத்திற்கு அனுப்பப்படல் வேண்டுமென்றும் அச் சுற்றறிக்கை கூறுகிறது.

சேவை வசதிக் கட்டணம் சம்பந்தமாகக் காணப்படக்கூடிய சகல விபரங்களையும் உடனடியாகப் பெற்றூர் தமது மாநிலக் கல்வி அதி...



## சமூகத்தொண்டன்

# 'அருணேதயாவின் தூண்'

## ஓய்வுபெறும் அதிபர் சிதம்பரப்பிள்ளை

அளவெட்டி அருணேதயாதன் 75ஆண்டு நிறைவு விழாவை நேற்றுத்தான் விமரிசையாகக் கொண்டாடியது. இவ்விழாவையொட்டிக் கல்லூரியில் பெரியதொரு புதுக்கட்டிடமும் திறந்த வெளியரங்கொன்றும் நிறுவப்பட்டுள்ளன. விழாமலரொன்றும் வெளியிடப்பட்டது. மகிழ்ச்சிக்குரிய இவை போன்ற நிகழ்ச்சிகளுக்கிடையே விசனத்துக்குரிய விஷயமொன்றும் உண்டு. அதிபர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஓய்வுபெறும் விஷயம்தான் அதுவாகும்.

திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் இன்று நேற்றுத்தான் அருணேதயாவைக் கட்டியெழுப்பியவர் என்று சொல்லிவிட முடியாது. நாற்பதுக்கு மேற்பட்ட வருடங்களாக அவர் அருணேதயாவில் ஆசிரியராக சேவை புரிந்திருக்கிறூர். ஆசிரிய சேவைக் காலம் முழுவதிலும் அவர் அருணேதயாவுக்கு ஆற்றியுள்ள அரும் பணிகள் அளப்பரியன. சுருங்கக்கூறின் அவர் அருணேதயாவின் பெரியதொரு தூணகவே விளங்கினுர் எனலாம்.

அதிபரவர்கள் தமது மாணவப் பருவத்தையும் அருணேதயாவிலேயே கழித்தவர். 'கேம்பிரிட்ஜ்' ... பர்கள் ஆகியோர் எவரும் பொன்னையா மாஸ்டரைக் கலந்தாலோசித்தே எதையும் செய்வர். அப்படியானதொரு செல்வாக்கு இவருக்கு இருந்து வந்திருக்கின்றது.

பொதுவாக அளவெட்டியில் உள்ளோர் சமயத்தில் ஈடுபாடுள்ளவர்கள். அவருள்ளும் ஒரு சிலர் ஆன்ம விசாரத்தில் அக்கறை கொண்டவர்கள். அத்தகையோரில் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களும் தலைசிறந்த ஒருவராவார். முறையாகக் குருவுபதேசம் பெற்றவர். உள்ளத்தை உணர வேண்டுமென்ற ஆர்வம் படைத்தவர்.

இவர் அருணேதயாவுக்கு மட்டுமல்ல அளவெட்டிக் கிராமத்துக்குமே பல தொண்டுகள் ஆற்றியுள்ளார். பெரியதொரு சமூகத் தொண்டன் இதனுல் இவருக்குக் கிராமத்தில் தனி மதிப்பு உண்டு.

இங்ஙனம் அன்பாலும் பண்பாலும் ஆற்றலாலும் தொண்டாலும் தலைசிறந்து விளங்குமொருவரின் சேவையை எமது கல்லூரி இழப்பது கவலைக்குரியதே. எனினும், அவர் இளைப்பாறிய பின்னரும் அன்னரது ஆசியும் ஆதரவும் கல்லூரிக்கு என்றும் கிடைக்கும். அவர் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புமாய் வாழ்...


## திருமண அழைப்பு

சௌமிய ஆண்டு ஆவணித் திங்கள் 27-ம் நாள் (12-9-69) வெள்ளிக்கிழமை பகல் 2-30 மணி முதல் 4-00 மணிவரையுமுள்ள மகர லக்கின சுப முகூர்த்தத்தில்

| எமது புதல்வன் | எமது சிரேஷ்ட புதல்வி |
| --- | --- |
| செல்வன் நடேசனுக்கும் | செல்வி மனசாவுக்கும் |

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரருடன் வருகைதந்து தம்பதிகளை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

வணக்கம்

| | |
| --- | --- |
| N. K. நல்லதம்பியும் பாரியாரும், | A. C. நடராசாவும் பாரியாரும், |
| ஆடியபாதம் வீதி, | ஆடியபாதம் வீதி, |
| திருநெல்வேலி வடக்கு, | திருநெல்வேலிவடக்கு, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

1740

THE COLLEGE OF HIGHER STUDIES
ANAIPANTHY, JAFFNA
(Approved under the Education Ordinance)

1969 ஏப்ரலில் நடைபெற்ற G.C.E. (A.L) கலைப் பிரிவுப் பரீட்சைக்குத் தோற்றிய எமது மாணவர் அறுவரில் நால்வர் சர்வகலாசாலையில் சேர்வதற்கு தகுதியுடன் சித்திபெற்றுள்ளனர்.

1970 ஏப்ரல் பரீட்சைக்கு எமது வகுப்பில் சேர்ந்து படிக்க விரும்புவோர் உடன் மனுச் செய்யவும்.

இங்ஙனம்
பதிவாளர்.

உயர்கலைக் கல்லூரி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1739

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி-கே ஆர்.விஜயா நடித்த
ஊட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென்கலர்)

REGAL JAFFNA
Daily 4-45, 7-00&9-45p.m
Fred Bear & Sylvia Solar
in
M. M. M. 83
(Eastman Color)

வல்வெட்டித்துறை
ரஞ்சஞ தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
முத்துராமன் - கே. ஆர். விஜயா நடித்த
மனம் ஒரு குரங்கு

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p.m
Poyadays 10-00 A,M.
Dean Martin RobertMitchum
in
" 5 CARD STUD "
(Techni Color)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி — ஜெயலலிதா, சௌகார் ஜானகி நடித்த
எங்க ஊர் ராஜா

67-வது தினம்
ராஜா
சுந்தரராஜன், மனேகர், ராமதாஸ், தங்கவேலு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 சங்கீதபாராயணம், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 வானொலி குறுக்கெழுத்து போட்டி, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செவ்.

விளையாட்டமைச்சினுல் இம்மாதம் 23-ம், 24-ம், 25-ம் திகதிகளில் யாழ். விளையாட்டரங்கில் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் அடங்கிய விழாவொன்று மிக விரிவான முறையில் நடைபெறவிருக்கின்றது.

வடமாகாணத்திலுள்ள எல்லா சனசமூக நிலையங்களும் இவ் விளையாட்டு விழாவில் பங்குகொள்ளவிருக்கின்றன. எல்லாவிதமான விளையாட்டுப் போட்டிகளும் இவ் விழாவில் நடைபெறுமென்றும், பாடசாலை மாணவிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் மிகச் சிறப்பாக இருக்குமென்று, விளையாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தே. நி)

கோல்களால் வெற்றி பெற்றது. (தே. நி

## மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

விளையாட்டமைச்சினுல் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களிடையே நடைபெறவிருக்கும் 'மெய்வல்லுனர்' போட்டி இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றன. (தே நி)

## ஐக்கியநாணய சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

நாவற்குழி ஐக்கியநாணய சங்க 28-வது ஆண்டு கூட்டம் தலைவர் திரு சண்முகரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது. கீழ் கண்டோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. க. சண்முகரத்தினம், உபதலைவர்: திரு. தி. தம்பிையயா, காரியதரிசி: திரு. பொ. சுப்பையா, தனாதிகாரி திரு. ம. பொன்னையா. மூன்று பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது. (தே. நி)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

கலாஜோதி சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் இம்மாதம் 11-ம் திகதி மாலை சமய அறிவுப் போட்டிகளுக்கான பரிசளிப்புவிழா நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாண நகரமுதல்வர் திரு. சி. நாகராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கர்நாடகசங்கீத நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மாணவரிடம்சேவை வசதிக் கட்டணம் வசூலிக்கும்முறை பற்றியும் அப்பணம் செலவிடப்படும் முறைகள் பற்றியும் பெற்ருர் ஆசிரியர் சங்கங்கள் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து கல்விப் பகுதி சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை விடுத்துள்ளது,

மாணவரிடமிருந்துபெறப்படும் பணத்துக்கு பற்றுச்சீட்டு கொடுக்கப்படல் வேண்டுமென்றும் ஒவ்வொரு தவணை முடிவிலும் வசூலிக்கப்பட்ட பணத்திற்குக் கணக்குக்காட்டவேண்டுமென்றும் ஒரு பிரதி சம்பந்தப்பட்ட பெற்ருர் ஆசி

## 'காலி இடங்களை நிரப்புக'

அளவெட்டி, திங்கள்

'சுன்னுகம், நெல்லியடிபட்டின சபைகளின் எழுதுவினைஞர்களுக்கான காலியிடங்களை நிரப்புவதற்கு உடனே நடவடிக்கை எடுக்கவும்' என்று கோரும் தந்தியொன்றை ஜனநாயக உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கச் செயலாளர் திரு. சு. பரமநாதன் உள்ளூராட்சி சேவை அதிகார சபைத்தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## கோப்பாய் மக்கள் கோரிக்கை

கோப்பாய், திங்கள்

கோப்பாய் கிராமசபைக் கட்டடம் விஸ்தரிக்கப்படவிருக்கும் பட்சத்தில் அதன் ஒரு பகுதியாக நூல் நிலையம் அமைக்கப்பட வேண்டியது அவசியம் எனக் கோரும் மகஜரொன்றை இப்பகுதி கி. ச. வாக்காளர்கள் கோப்பாய் கிராமசபைத்தலைவர் திரு தி பரமானந்தராசவுக்கு அனுப்பி வைக்கவுள்ளனர்.

றது.

சேவை வசதிக் கட்டணம் சம்பந்தமாகக் காணப்படக்கூடிய சகல பிராதுகளையும் உடனேயாகப் பெற்ருர் தமது மாநிலக் கல்வி அதிபதியிடம் அறிவிக்குமாறும் சுற்றறிக்கை கூறுகிறது.

## மனைவியை வெட்டினராம்

வல்வெட்டித்துறை, திங்.

நாகர் கோவிலைச் சேர்ந்த சி. கந்தையா என்பவர் அவரது மனைவி பராசக்தியை கத்தியால் வெட்டி காயப்படுத்தியதாக பொலிசாரால் சந்தேகத்தின்பேரில் கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் படுத்தினர். மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 500 பிணையில் செல்லுமாறும் மீண்டும் இம்மாதம் 15-ந் திகதி கோட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டுள்ளார்.

## அத்துமீறிப் பிரவேசித்தாராம்

வல்வெட்டித்துறை, திங்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அ. கோவிந்தன் என்பவர் புலோலி தெற்கைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் வீட்டுக்குள் அத்துமீறி பிரவேசித்து பெண் ஒருவருடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே விக்னராசா இம் மாதம் 29ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

கிஞர் எனலாம்.

அதிபரவர்கள் தமது மாணவப் பருவத்தையும் அருணேதயாவிலேயே கழித்தவர். 'கேம்பிறிஜ் சீனியர் படிப்பதற்கு மாத்திரம் ஸ்கந்தவரோதயாவில் இரண்டு வருடங்கள் இருந்திருக்கிருர் மாணவனுகவிருந்த காலத்தும் அவரது விவேகத் திறமையாலும் படிப்பு முன்னேற்றத்தாலும் அருணேதயாவுக்கு நற்பெயரீட்டித் தந்தவர்.

இவர் கேம்பிறிஜ் சீனியர் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகள் வெளியாகு முன்னரே அருணேதயாவின் அப்போதைய சொந்தக்காரரும் முகாமையாளருமாயிருந்த திரு. நா. அ. சுப்பையா உபாத்தியாயரவர்கள், இவரை அழைத்து வந்து தமது பாடசாலையில் ஆசிரியராக அமர்த்திவிட்டார். அப்போது இவர் வயது பத்தொன்பது. 1928-ம் ஆண்டு அருணேதயாவில் ஆசிரியராய் அமர்ந்த இவர் 1969 வரை இங்கே உதவி ஆசிரியராகவும், உப அதிபராகவும் அதிபராகவும் இருந்திருக்கிருர். அளவெட்டியிலுள்ள இரண்டு மூன்று சந்ததியினர் இவரிடமே கல்வி பயின்று இலங்கை, மலேசியா ஆகிய இடங்களில் உயர்ந்த உத்தியோகம் வகித்து வருகின்றனர்.

திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களை மாணவருட்பட எல்லோரும் 'பொன்னையா மாஸ்டர்' என்றே அன்பேர்டு அழைப்பார்கள் அவரிடம் மாணவர், ஆசிரியர், பொதுமக்கள் அனைவரும் ஒரு தனி மதிப்புக் காட்டி வந்தனர்; வருகின்றனர். அருணேதயா சம்பந்தப்பட்ட வரையில் முகாமையாளர்கள், அதி

றிய பின்னரும் அன்னரது ஆசியும் ஆதரவும் கல்லூரிக்கு என்றும் கிடைக்கும். அவர் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புமாய் வாழ் என வாழ்த்துவோமாக,

## புதிய பெண் ஜே. பி.

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரான திருமதி அந்தோனியா சுவாமிநாதன் சமாதான நீதிபதியாக நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனுப் ஐ. எம். இஸ்மயில் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நீதிமன்றத்திற்கு வெளியில் இவர் வந்த போது மேயரும் மாநகரசபை உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் வரவேற்ருர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவர் சமாதான நீதிபதி பட்டம் பெறும் முதல் பெண்மணியென்பது குறிப்பிடத்தக்கது.

## வாலிபர் மகாநாடு

யாழ்ப்பாணம், செவ்

தமிழ் காங்கிரஸ் வாலிபர் மகாநாடு இன்று மாலை சாவகச்சேரியில் திரு ஜி ஜி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கிறது, வருடாந்த மகாநாடு, சவகச்சேரியில் நவம்பர் மாதம் நடுப்பகுதியில் நடைபெறுமென்று கமிட்டி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்,

## முதலிடம்

வவனியா, திங்கள்

வவனியா வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கலைப்போட்டியில் கனகராயன்குள மகா வித்தியாலயம் தயாரித்த ''பண்டாரவன்னியன்'' முதலிடத்தைப் பெற்றது விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய வடமாநில வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் வெற்றிக்கிண்ணம் அளித்துப் பாராட்டினுர்.

## ஏற்பாடுகள்

அளவெட்டி, திங்கள்

வலிகாமம் வடக்கு (காங்கேசன்துறை) விளையாட்டுக் கழகங்களில் சமாஜ 2-ஆவது ஆண்டு விளையாட்டு விழா நடைபெறஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.


# நல்லூர்க்கந்தன் அடியார்களுக்கு ஓர் நற்செய்தி!

மில்க்வைற்சோப் வாங்குபவர்கட்கு நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் அமைக்கப்பெற்றுள்ள எங்கள் விளம்பர காட்சிசாலையில் 10, 11-ம் திகதிகளில் கீழ்க்காணும் பொருட்களை அன்பளிப்பாகக் கொடுக்கின்ருேம்.

(1) கந்த விரதமும், கந்த சஷ்டி கவசமும் என்னும் தேவாரப் புத்தகம்
(2) ஓர் அழகிய பிளாஸ்டிக் பை
(3) அளவையூர் அருட்கவி அவர்கள் இயற்றிய தேவாரத் திரட்டு
(4) சிறந்த மணிவாக்குகள்

இவை அனைத்தும் சோப் வாங்கும் ஒவ்வொரு அடியார்களுக்கும் இலவசமாக வழங்கப்படவிருக்கிறது.

# மில்க்வைற் சோப் தொழிற்சாலை

527 கே. கே. எஸ். வீதி, [போன்: 7233] யாழ்ப்பாணம்.



67-வது தினம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்

# குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!



யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, நடித்த

# பால்குடம்



யாழ்நகர் வெலிங்டன்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10-30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ணா ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

# பக்த பிரகலாதா

(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்ட யு. எஸ். தூதர் விடுவிக்கப்பட்டார்

றியோடிஜெனிரோ, செப்டம்பர் 8

**பிரேஸில்நாட்டில் கலகக்காரர்களால் பிடித்துவைக்கப்பட்டிருந்த அமெரிக்கத் தூதர் எல்பிரிக் விடுதலைசெய்யப்பட்டிருக்கின்றார்.**

பிரேஸில் அரசாங்கம் கைதுசெய்திருந்த அரசியல் கைதிகள் பதினைந்து பேரை விடுவிக்கக் கோரி அமெரிக்கத் தூதர் எல்பிரிக்கை அவர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி பிடித்துவைத்திருந்தார்கள். தாங்கள் குறிப்பிடும் அரசியல் கைதிகள் 15 பேரையும் விடுவித்தால் மட்டுமே அமெரிக்கத் தூதரை விடுவிக்க முடியுமென்றும் இல்லையென்றால் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படுமென்றும் அவர்கள் அறிவித்திருந்தனர் இதன்பேரில் பிரேசில் அரசாங்கம் 15 அரசியல் கைதிகளையும் விமானத்தில் ஏற்றி மெக்ஸிக்கோவுக்கு அனுப்பிவைத்தது. அவர்களுக்கு மெக்ஸிக்கோ அரசுபுகலிடம் கொடுத்தது. இவர்கள் விடுவிக்கப்பட்ட சில மணித்தியாலங்களில் திரு.எல் பிரிக் முன்னறிவித்தலின்றி தமது வீட்டுக்கு 'டாக்ஸி' ஒன்றில் வந்து சேர்ந்தார். அவர் வெளிறிப்போய் தாடிவழிக்காமல் இருந்தார். தலையில் ஒரு காயமிருந்தது. அவரைக் கடத்திச் சென்றபொழுது றிவால்வரினால் தாக்கப்பட்டதால் இக்காயம் ஏற்பட்டதாம்.

தமது விடுதலைக்காக பிரேஸில் அரசாங்கம் எடுத்த முயற்சிக்கு திரு. எல்பிரிக் நன்றி தெரிவித்தார். தம்மை ஒரு பெரிய வீட்டின் அறையொன்றில் பூட்டி வைத்திருந்தார்களென்றும், தமது சட்டையைக்கூட அவர்கள் துவைத்துக் கொடுத்தார்களென்றும் எல்பிரிக் கூறினார்

திரு.எல் பிரிக் தமது வீட்டுக்கு வந்தபொழுது அங்கு பலத்த காவல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## அமெரிக்காவும் சைகோனும் முழு பொறுப்பேற்க வேண்டும்

ஹனோய், செப். 8

தென்வியட்னாமில் மூன்று நாள் போர் ஓய்வு கடைப்பிடிக்க வியட்காங்கியர் அறிவித்ததை தென்வியட்னாம் நிராகரித்ததற்கு விடுதலை முன்னணியினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாரிஸ் பேச்சுகளில் கலந்துகொண்டு விடுதலை முன்னணி புரட்சி அரசின் பிரதிநிதிகள் இந்தப் போர் ஓய்வைப் புறக்கணித்ததின் மூலம் ஏற்படும் விளைவுகளுக்கு அமெரிக்காவும் தென்வியட்னாம்அரசும்தான் முழு பொறுப்பும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கிடையில் டாக்டர் ஹோசிமின் மரணச்சடங்குகளில் கலந்துகொள்வதற்காக ஹனோய் வந்திருக்கும் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் வடவியட்னாம் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். வியட்னாம் போர் போன்ற முக்கிய விஷயங்களில் இருதரப்பினருக்கும் முழுத்திருப்தி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. திரு. கொஸிஜின் வடகொரிய பிரதிநிதிகளோடும் ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

## 28 நாடுகளுக்கு 45 கோடி நாணயங்கள்

லண்டன், செப் 8

பிரிட்டிஷ் ராயல் நாணயசாலை சென்றவருடம் இலங்கை உட்பட 28 நாடுகளுக்கு 456,000,000 நாணயங்களை அச்சடித்துக் கொடுத்தது. இலங்கைக்கு இப்போது புழக்கத்திலிருக்கும் நாணயங்களுடன் சேர்த்து [illegible] சென்றவருடம் வெளிநாடுகளுக்கு அச்சடித்துக்கொடுத்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சோவியத் புகைப்பட கண்காட்சி

## ராட்சத எண்ணெய்க் கப்பல்

ஹாம்பர்க் செப் 8

உலகில் பிரமாண்டமான எண்ணெய்க் கப்பல்களில் ஒன்றான ''மிரினு'' என்னும் ஜெர்மன் கப்பல், 1,92000 டன் எண்ணெய் ஏற்றிச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது- சமீபத்தில் 320 மீட்டர் நீளமுள்ள இக்கப்பல் எல்பி ஆற்றில் துறைக்கு வந்து சேர்ந்தது. மில்லி மீட்டர் கூடத்தவறுமல் துல்லியமாக இக்கப்பல் துறைக்கு வப்து நின்றது.

## சரணடைந்த இருவரும் றிமாண்டில்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மண்டைதீவில் கள்ளுக் குடித்த கைலாசநாதன் என்பவர் மரணமானது சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த இருவரும் யாழ்ப்பாணம் பொலிசார்முன் [illegible]

## 'தமிழ் வளர்க்க 4-வது சங்கம் தேவை'

சாவகச்சேரி, திங்கள்

'சேர, சோழ, பாண்டிய அரசர் காலத்திலே முச்சங்கம் அமைத்து தமிழை வளர்த்தது போல நான்காவதாக ஒரு சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தால் தமிழ் முன்போல் சிறப்புடன் விளங்கும்.'

என கோயிலாக்கண்டி, மறவன்புலோ, தனங்கிழப்பு தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய முன்னைள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசுவாமி கூறினார்.

திரு. செ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு வி. குமாரசுவாமி மேலும் கூறியதாவது.


'வருங்காலத்தை வழிநடத்தும் பொறுப்பு வாலிபர்கள் கையில் உள்ளது. வாலிபர்கள் எதையும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். தமிழ் மக்களிடையே தோன்றியிருக்கும் போட்டி பூசல்கள் மறைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்தால் தமிழர் சமுதாயம் முன்னேறும். நமது நாடு சுபீட்சமாக வாழ நாட்டின் செல்வநிலை உயர வேண்டும்' என்றார்.

வழக்கறிஞர்கள் திருவாளர்கள் வி. கனகசபை, சி. பொ. மயில்வாகனம், பி. கார்த்திகேசு, வி. ஆனந்தசங்கரி ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர்.

## புதிய உப தலைவர்

உடுவில், திங்கள்

மானிப்பாய் கிராம சபையின் புதிய உபதலைவராக திரு. எஸ் மகேஸ்வரன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கிராமசபை உறுப்பின[illegible]ான திரு. ஜெகரத்தினம் அவரின்பெயரைபிரேரிக்க, திரு. ஏ. சதாசிவம் அதனை வழிமொழிய திரு. மகேஸ்வரன் [illegible] தெரிவுசெய்[illegible]



## லண்டன் சென்றார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுதுமலையைச் சேர்ந்த திரு. ரி. கே. குகதாஸ் நெசவு பொறியியல் மேற்படிப்புக்காக இம்மாதம் 6-ந் திகதி லண்டன் பயணமானு. இவர் லண்டனிலுள்ள போல்டன் நெசவு பொறியியல் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்றுத் திரும்புவார்கள்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவரான திரு. குகதாஸ், சுன்னாகம் பட்டின சபை ஆய்வுக்குழு அங்கத்தவராகவும், சுதுமலை இளம் விவசாய கழக உபதலைவராகவும் பணியாற்றி வந்திருக்கிறார்.

## உள்ளூராட்சி தலைவர்கள் மாநாடு

மல்லாகம், திங்கள்

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் இம்மாதம் 16-ம் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ. ஏ. யோசேப் தலைமையில் யாழ். மாவட்டஉள்ளூராட்சி மன்றங்களின் அக்கிராசனர்கள் ஆலோசனை மகாநாடு நடைபெறவிருக்கின்றது.

## கோரிக்கை

கோப்பாய், திங்கள்

கோப்பாய் கிராம சபை கட்டடம் விஸ்தரிக்கப்படவிருக்கும் பட்சத்தில் அதன் ஒரு பகுதியாக நூல்நிலையம் அமைக்கப்பட வேண்டியதவசியம் எனக்கோரும் மனு[illegible]ரொன்றை இப்பகுதி கி[illegible] வாக்காளர்கள் கோப்பாய் கிராம சபைத்தலைவர் திரு. தி. பரமானந்தராசாவுக்கு அனுப்பிவைக்கவுள்ளனர்.

## ''1[illegible] நாடுகளுடன் சோவியத்

# கருணநிதியின் பெருந்தன்மை பக்தவத்சலம் பாராட்டுகிறார்

சென்னை, செப். 8

காங்கிரஸ் கட்சியில் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்று தமிழ்நாடுமுதலமைச்சர் திரு. மு கருணநிதி சமீபத்தில் பேசியிருந்தார் அல்லவா, இதை முன்நாள் தமிழ்நாடு முதலமைச்சரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான திரு. பக்தவக்சலம் வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சி உடையக்கூடாதென்பதில் எல்லாருக்கும் அக்கறையிருக்கிறதென்பதை இது காட்டுகின்றது. அத்துடன் திரு. கருணநிதியின் பெருந்தன்மையையும் அரசியல் முதிர்ச்சியையும் இது காட்டுகின்றது என்று திரு. பக்தவக்சலம் கூறியிருக்கிறார்.

திரு. சி. சுப்பிரமணியத்தை காங்கிரஸ் கட்சியில் சிலர் கண்டிப்பதையும் திரு. பக்தவக்சலம் கண்டித்தார் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

கட்சியின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கு காரிய கமிட்டி தீர்மானம் நிறைவேற்றிய பின்னரும் சிலர் கெடுபிடி போர் மாதிரி ஒன்றை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இது காங்கிரஸ் கட்சிக்கு நல்லதல்ல.

சிலர் தனிப்பட்ட முறையில் பிரதமரை தாக்கி வருவதும் கண்டிக்கத்தக்கது.

காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்திற்கு எதிராக காங்கிரஸ்காரர்கள் இந்த சர்ச்சையை தொடர்ந்து நீடிக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

பிரதமரின் கௌரவத்தை குறைக்கும் வகையில் காரியங்கள் செய்யப்படுவதை அனுமதிக்கக்கூடாது.

அதேபோன்று காங்கிரசில் உள்ள தீவிரவாதிகள் எனப்படுவோர் காங்கிரஸ் தலைவரையோ, அல்லது காமராஜரையோ தனிப்பட்ட முறையில் தாக்கி பேசுவதை வன்மையாக எதிர்க்கிறேன்,

காரியக்கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்திற்கு எதிராக தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் விரும்பத்தகாத இந்த காரியங்களை, காமராஜர் தடுத்து நிறுத்துவார் என்று நம்புகிறேன்.

காரியக்கமிட்டி தீர்மானத்திற்கு பிறகும், சில காங்கிரஸ்காரர்கள் இந்திராவுக்கு விரோதமாக பேசிவருவதை குறிப்பிட்டு, பக்தவக்சலம் கூறியதாவது:-

இது விபரீதமான போக்கு [illegible] கிறார்கள். இன்னும் பட்டேல் 'சின்டிகேட்' சார்பாகத் தானே பேசிக் கொண்டு இருக்கிறார்,

முதலமைச்சர் கருணநிதி காங்கிரஸ் கட்சியில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று பேசி இருப்பதை வரவேற்காமலும் பாராட்டாமலும் இருக்க முடியாது. இதிலிருந்து காங்கிரஸ் உடையக்கூடாது என்பதில் எல்லோருக்கும் அக்கறை இருப்பது தெரிகிறது.

முக்கியமாக முதலமைச்சர் கருணநிதி கூறியது பாராட்டத்தக்கது. இது அவருடைய பெருந்தன்மையை அரசியல் முதிர்ச்சியை காட்டுகிறது.

## 'நாடு முன்னேற மாணவர்செய்யவேண்டியது'

அல்லைப்பிட்டி, திங்கள்

''ஒரு நாடு முன்னேற வேண்டுமானல்மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் உடையவர்களாய் விளங்குதல்வேண்டும் இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கிணங்க இளமைப் பராயத்திலே நல்ஒழுக்கங்களைக்கடைப்பிடித்து நற்பிரஜைகளாய் வாழவேண்டும். இன்றையமாணவர்கள்எதிர்கால அரசியல் விற்பன்னர்களாகவும் நாட்டின் தலைவர்களாகவும் மாறலாம். எனவே மாணவர்கள் தங்கள் சுயமுயற்சியினால் முன்னேறுதல்வேண்டும்''

மேற்கண்டவாறு வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் உயர்வகுப்பு மாணவர்களால் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் பேசுகையில் ஆசிரியர் திரு. பி. பொன்னுச்சாமி குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் நமது வாழ்க்கைக்கும் சமயத்துக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஒவ்வொருவருடைய சமயமும் வாழ்க்கையின் தத்துவங்களை நயம்படக்கூறுகின்றது. எந்தச்சமயத்தை நாம் கைக்கொண்டாலும் அந்தந்த சமயத்தின் கட்டுக்கோப்பிற்கிணங்க நடத்தல் வேண்டும். எல்லா மதங்களும் கடவுளை அடைய வேண்டுமென்ற ஒரே தத்துவத்தையே போதிக்கின்றது என்றார். இக்கூட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அதிபர் ஜே. அரியரெத்தினமும் கலந்துகொண்டார்.

## மல்லாகச் செய்திகள்

### மூவர் பிணையில்

மல்லாகம், திங்கள்

ஈவினையைச் சேர்ந்த வேலன் கிட்டிணன் தனது வீட்டில் 580 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் களவுபோய் விட்டதாக சுன்னாகம் பொலிசில் புகார் செய்ததையடுத்து மூவர் கைது செய்யப்பட்டனர். கணேசு, செல்லம், சிவசரணம் ஆகிய மூன்று சந்தேக நபர்களையும் மல்லாகம் நீதிபதி திரு எஸ் ஆனந்தகுமாரசாமி பிணையில் செல்ல அனுமதியளித்து இம்மாதம் 12-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி கட்டளையிட்டுள்ளார்,

0 0

### மாட்டுவண்டிப் போட்டி

மயிலிட்டிக்கிராமசபைக்கு அருகிலுள்ள திறந்த வெளியில் மயிலிட்டி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஆதரவில் இம்மாதம் 18-ம் திகதி மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடாத்தப்படவிருக்கின்றது. போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு வலிவடக்கு காரியாதிகாரி திரு பீ. எஸ். பற்றிக் பரிசுகளை வழங்குவார்.

0 0

### மாடு வெட்டிய பெண்ணுக்கு அபராதம்

லைசென்ஸ் இன்றி மாடு வெட்டியதாக சங்கானைப் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்ட அந்தோனிப்பிள்ளை மரியம்மா என்ற பெண்மணி தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட[illegible]

## ஆசிரியர் காலமானார்

கோப்பாய், திங்கள்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த 25 ஆண்டுகாலமாக தமிழ் விரிவுரையாளராக கடமையாற்றி வந்த பண்டிதர் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ங்கை உட்பட 28 நாடுகளுக்கு 456,000,000 நாணயங்களை அச்சடித்துக் கொடுத்தது. இலங்கைக்கு இப்போது புழக்கத்திலிருக்கும் நாணயங்களுடன் சேர்த்து விசேஷ இரண்டுரூபாய்நாணயங்களும் சென்ற ஆண்டு பெருமளவில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டன.

ராயல் நாணயசாலையின் வருடாந்த அறிக்கையில் மேற்படி விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுவிட்ஸர்லந்து மூன்று ரகமான 45,000,000 நாணயங்களுக்கு சென்றவருடம் கோரிக்கை விடுத்ததாக இவ்வறிக்கை கூறுகிறது. பிஜி தீவுக்கும் ஐஸ்லாந்திற்குமாக புது ரகமான விசேஷ நாணயங்கள் அச்சடித்துக் கொடுக்கப்பட்டன

ஐ. நா, உணவு விவசாய ஸ்தாபனத்தின் புதிய திட்டம் ஒன்றின்கீழ் இலங்கை, புருண்டி, உகண்டா ஆகிய நாடுகளுக்கு விசேஷ ஞாபகார்த்த நாணயங்களும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டன இவற்றில்இலங்கையின்புதிய இரண்டுரூபா நாணயங்கள் அடங்கும்.

இது இவ்வாறிருக்க பிரிட்டனில் தனிப்பட்ட நாணய ஸ்தாபனங்களாக இயங்கி வரும் ''இம்பீரியல் மெட்டல் இன்டஸ்ரீஸ்'', ''பர்மிங்ஹாம்மின்ட்லிமிட்டட்'' ஆகியன தனிப்பட்ட கொந்தருத்துகளின் கீழ் 328,000,000 நாணயங்களை ப்பிடத்தக்கது.

## சோவியத் புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தின் யாழ்கிளையின் சார்பில் நல்லூர் சந்தி ஐக்கிய கலாசாலை மண்டபத்தில் சோவியத் புகைப்படக் கண்காட்சி 5ம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. இக் கண்காட்சி 12ம் திகதிவரை நடைபெறும். இக் கண் காட்சியை யாழ் மேயர் திரு. எஸ். நாகராஜா திறந்து வைத்தார்.

சோவியத் திரைப்பட விழா வீரமாகாளி கோவில் மேற்கு வீதியில் தினமும் இரவு 8-30 மணிமுதல் 10-30 மணிவரை இலவசமாக நடைபெறுகிறது.

## காந்தி நூல் அன்பளிப்பு

மானிப்பாய், திங்கள்

சர்வோதய பாத்திரங்கள் மூலம் ஜூன் மாதத்தில் 101 வீடுகளிலிருந்து 139 கொத்து அரிசியும் 14 ரூபா 80 சதமும் பெறப் பட்டது. ஜுலை மாதத்தில் 95 வீடுகளிலிருந்து 107 கொத்து அரிசியும் 16 ரூபா 83 சதமும் பெறப்பட்டது.

காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலங்கை-இந்திய தூதுவர் அலுவலகம் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்கு 29 காந்தி நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

## பிரிட்டனில் பயிலும் இலங்கையர்

லண்டன், செப் 8

கம்பியூட்டர் இயந்திரங்களின் தொழில்நுட்பம் பற்றி இலங்கையர் ஒருவர் தற்சமயம் இங்கிலாந்தில் பயிற்சிபெற்று வருகிறார். இவர்தான் கட்டுபெத்தை தொழில்நுட்பக கல்லூரியில் கணித விரிவுரையாளராகக் கடமையாற்றும் திரு. பிரான்சிஸ் டீ சில்வா.

## நியமனம்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய்சுகாதாரபகுதி அதிபராக கடமையாற்றிய திரு. வி. தேவராஜன் இப்பகுதியின் மலேரியாத்தடுப்பு இயக்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தற்காலிக மாஜிஸ்திரேட்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜனுப் மொகமட் ஜமீல் நாளையிலிருந்து லீவில் செல்வதால் முடிக்குரிய வழககறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் ஜே. பி. யூ. எம் நாளையிலிருந்து இம்மாதம் 11-ம் திகதி வரை யாழ்ப்பாணம் தற்காலிக மாஜிஸதிரேட்டாகக் கடமையாற்றுவார். (கா-நி)

## வீடமைப்புத் திட்டம்

கோட்டை, திங்கள்

கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தன மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மக்களுக்கு வீட்டுவசதியளிப்பதற்காக பத்தரை இலட்சம் ரூபாவில் வீடமைப்புத் திட்டமொன்றைத் தீரமானித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், செவ்வாய்

மண்டைதீவில் கள்ளுக் குடித்த கைலாசநாதன் என்பவர் மரணமானது சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த இருவரும் யாழ்ப்பாணம் பொலிசார்முன் சரணடைந்தனர்.

சரணடைந்த கணபதிப்பிள்ளை, பழனி ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (கா-நி)

## அதிபராக நியமனம்

மானிப்பாய் திங்கள்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கனிஷ்ட பாடசாலையின் அதிபராக திரு. ஸி பி- பவிங் நியமிக்கப்பட்டுள்ளார். ஒல்லாந்திலிருந்து வந்து கடந்த 15 வருடங்களாக மேற்படி கல்லூரியில் இவர் கடமையாற்றிவருகிறார்.

தினம் அவரின்பெயரைபிரேரிக்க, திரு. ஏ. சதாசிவம் அதனை வழிமொழிய திரு. மகேஸ்வரன் ஒருமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

றொன்றை இப்பகுதி வாக்காளர்கள் கோப்பாய் கிராம சபைத்தலைவர் திரு. தி. பரமானந்தராசாவுக்கு அனுப்பிவைக்கவுள்ளனர்.

# "136 நாடுகளுடன்சோவியத் உறவு வைத்திருக்கிறது"

### — ரஷ்ய ஸ்தானிகராலய அதிகாரி

மல்லாகம், திங்கள்

'சோவியத்நாடு உலகில் 136 நாடுகளுடன் ராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. சகல இனங்களும் சமரீதியில் மதிக்கப்பட வேண்டும் என்ற லெனினின் உபதேச அடிப்படையில் எமது வெளிநாட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இலங்கை சோவியத் உறவு மேலும் ஸ்திரமடையக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன' என இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகராலய கலாச்சார அதிகாரி திரு. வினிக் மயிலிட்டி கிராமசபை அளித்த வரவேற்புக்குநன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கிராமசபைத் தலைவர் திரு. என். கிருஷ்ணசாமி, பண்டிதர் க. சச்சிதானந்தம், திரு. வ. பொன்னம்பலம் ஆகியோரும் பேசினர்.

சோவியத் பிரதிநிதி, சுன்னாகம், ஊரெழு பட்டின சபைகளுக்கும் விஜயம் செய்து பெருந்தொகையான புத்தகங்களை இவற்றின் நூல்நிலையங்களுக்கு அன்பளிப்புச் செய்தார்.

# கைரேகை மூலம் உடல் நோயை அறியலாம்

## ஜெர்மன் டாக்டரும் ஒத்துக்கொள்கிறார்

மேற்கு பொலின், செப் 8

கைரேகையைப் பார்த்து உடற்கோளாறு பற்றித் தெரிந்து கொண்டுவிட முடியுமா? முடியுமென்று மேற்கு ஜெர்மனியில் பேராசிரியர் வால்டர் ஹெர்ஷ் கூறுகிறார்

குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு விரல் ரேகைகள் எவ்வாறு பயன்படுகிறதோ அவ்வாறே ஒரு காலத்தில்கைரேகைகளும்பாதப படிவுகளும் வைத்திய பரிசோதனைகளுக்கு பயன்படுபனவாகும் என்கிறார் பேராசியர் ஹொஷ்.

டாக்டர் ஹெர்ஷ் மேற்கு பெர்லின் சுதந்திரப் பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவ நிபுணர் குழுவில் ஒரு முக்கிய அங்கம் வகிப்பவர், மேற்கு ஜெர்மனியின் ஆராய்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டின் கீழ் முழுமையான ஆராய்ச்சியை அவர் நடத்தியிருக்கிறார். அதன் பயனாக அவரும் அவரது சக நிபுணர்களும் கண்டமுடிவின் விவரமாவது:—

ஒருவரது கைரேகைகள் அவரது ஆயுட்காலம் முழுவதும் மாறுவதில்லை. அவ்வாறு மாறுதல் ஏதும் ஏற்படாத கைரேகைகள் நிச்சயமான தனித்தன்மை பெற்றிருக்கவேண்டும்,

ஆயிரக்கணக்கான சின்னஞ்சிறு குழந்தைகளின் கைரேகைப்பதிவுகளை அளித்து இந்த நிபுணர்களின் ஆராய்ச்சிகளுக்கு அவற்றைப்பயன்படுத்த உதவினர், கம்யூபிட்டர்களின் உதவியைக்கொண்டுகைரேகைக் கோடுகளை வகைப்படுத்தி பெரிய கோடுகள், சிறு கோடுகளுக்கான மதிப்பீடுகள் தொகுக்கப்பட்டன, ஆராய்ச்சிகளுக்கிடையில் ஏற்கனவே வரையறுக்கப்பட்டமுடிவுகளில் ஏதேனும் வேற்றுமை காணப்பட்டால் நிபுணர்கள் சம்பந்தப்பட்ட ரேகையுள்ள பிறப்புக்கோளாறு ஏதேனும் இருக்குமென்ற முடிவை ஏற்படுத்திக் கொள்ளக் கூடும்.

மங்கோலியக்குழந்தைகள் ஏறத்தாழ அறுபது சதகிகிதத்தினருக்கு உள்ளங்கை மேற்பாகத்தில் ஒரு நேர்கோடு ரேகைஓடுவது கண்டு பிடிக்கப்பட்டது. மற்ற குழந்தைகளின் கைகளில் காணப்பட்ட வளைந்தரேகைகளிலிருந்து அந்தக் குழந்தைகளின் ரேகை மாறுபட்டிருந்தன. நோயாளர்களின் ரேகையைப் பார்த்தவுடனயே உடற்கோளறு என்ன என்பதைநிர்ணயித்து விடலாம்.

கைரேகையில் தோன்றிய மாக்றத்தைக் கொண்டு ஒரு நோயாளியின் நிணநீர் சுரப்பியின் செயல்முறையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை உணரமுடிந்தது என்று ஆஸ்திரிய டாக்டர் ஒருவர் கூறியிருக்கிறார். ஆனால் இவ்வகை மாற்றங்கள் குறித்து மேற்கொண்டு ஆராய்ச்சிகள் தேவை. தீர்ந்த ஆராய்ச்சியின்றி எவ்வித் முடிவுக்கும் வந்துவிடுவது நன்மைதராது, எனினும் ரேகை சாஸ்திர ஆராய்ச்சி முறைக்கு சிறந்த உதவுபடியாக இருக்குமென்பதில் ஐயப்பாடு இல்லை.

குழந்தைகள் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களையும் குணப்படுத்துவதில் கைரேகை ஆராய்ச்சி பேருதவி புரியவல்லது என்பது பெர்லின் குழந்தை வைத்திய நிபுணர்களின் தேர்ந்த கருத்து,

திற்கு பிறகும், சில காங்கிரஸ்காரர்கள் இந்திராவுக்கு விரோதமாக பேசிவருவதை குறிப்பிட்டு, பக்தவக்சலம் கூறியதாவது:-

இது விபரீதமான போக்கு இதில் பழைய சம்பிரதாயப்படி நோட்டீஸ் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று பிடிவாதம்செய்வது ஆபத்தான யோசனை. அது காங்கிரசுக்கோ காங்கிரஸ்காரர்களுக்கோ நல்லதல்ல. இந்திராமீது நடவடிக்கை எடுப்பதை நாட்டுமக்கள் விரும்பமாட்டார்கள். குறிப்பாக பெண்கள் சமுதாயம்அதை விரும்பாது.

கட்சித் தலைமை, ஆட்சித் தலைமை இரண்டும் ஒன்றை ஒன்று கட்டுப்படுத்த முடியாதுதான். ராணுவத்தில் புதிதாக ஒரு தளபதியை நியமனம் செய்வதற்குகட்சி யோசனைப்படி நடக்க முடியுமா? அதெல்லாம் ஆட்சி தலைமையினுடைய விருப்பம்.

கட்சி எதிலெல்லாம் தலையிடலாம் என்பதற்குவரம்பு தேவை ஆகவே பிரதமர் இந்திரா கூறியது ஒன்றும் புதிது அல்ல.

'சின்டிகேட்' என்றேஒன்று கிடையாது என்று நிஜலிங்கப்பா கூறினார். அது உடைந்துவிட்டதால் அப்படிக்கூறு

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை தொழிலாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் ஆ. சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: ஆ. இராதாக்கிருஷ்ணன், உபதலைவர்: பு. பெரியதம்பி, சி, இராசரத்தினம், காரியதரிசி: செ. வேலுப்பிள்ளை, உபகாரியதரிசி: மு. சோமசுந்தரம், தனாதிகாரி: க. கதிரித்தம்பி, உபதனாதிகாரி: ஆ. கனகம்மா, நிர்வாகிகள் எம். ஆறுமுகம், செல்வி. த. மங்கையற்கரசி.

0 0

யாழ்ப்பாணம், செவ்

பாசையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலைய இளைஞர் கழக புதுவருட நிர்வாகிளாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்:-

தலைவர் எஸ். ரி. பெர்னாண்டோ. உபதலைவர் யோதே வ தாஸ். செயலாளர் திரு. ஜி. டேவிட். உபசெயலாளர் திரு. சி. பென்டியா. தனாதிகாரி திரு. க. யோகராசா, உபதனாதிகாரி திரு. ஆ. ஜேசுதாஸ். (கா. நி.)

வெட்டியதாக சங்கானைப் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்ட அந்தோனிப்பிள்ளை மரியம்மா என்ற பெண்மணி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மல்லாகம் நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசாமி ரூபா 25 அபராதம் விதித்தார்.

0 0

## பிணையில் அனுமதி

சுழிபுரத்தைச் சேர்ந்த ரி. செல்லமணி என்ற 17வயது இளம்பெண்ணை காரில் கடத்த எத்தனித்ததாக சகோதரர் மூவரை சங்கானைப் பொலிசார் கைது செய்து மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

மூன்று நபர்களையும் தலா 500 பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்து மீண்டும் கோர்ட்டில் இம் மாதம் 14-ம் திகதி ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளார்.

0 0

## கணவன்தற்கொலைக்கு இப்படியொரு காரணம்

குடிப்பழக்கத்தை மனைவி கண்டித்துப் பேசியதால்மனமுடைந்து காணப்பட்ட கணவர் தற்கொலை செய்து கொண்டார்.

ஏழு பிள்ளைகளுககுத் தந்தையான கட்டுவன் வர்த்தலைவிளான் வாசியான அருணசலம் கந்தையா (வயது46) என்பவரே நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டவராவார்.

மரணவிசாரணை அதிகாரி திரு என். நாகலிங்கம் விசாரணை நடத்தினார். விசாரணையின்போது இறந்தவரின் மனைவி தையல்நாயகி, தாயசீர் பொன்னுப்பிள்ளை வீ. சின்னத்தம்பி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

0 0

## ஹோ - ஷி- மின்னுக்கு அனுதாபம்

வடமியட்னும் ஜனாதிபதி ஹோ-ஷி-மின் மறைவு குறித்து அனுதாபக் கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி பிரதேசக் கிளை காரியாலயத்தில் இம்மாதம் 10-ம் திகதி மாலை நடைபெறவிருக்கின்றது. இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி சமசமாஜக் கட்சி மற்றும் தொழிற்சங்கப் பிரமுகர்கள் இதில் கலந்து கொள்வர்.

## நட்புறவுச்சங்கக் கிளை

முல்லைத்தீவில் இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கக் கிளை இம்மாதம் 25-ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். இதில் சோவியத் கலாச்சார அதிகாரி திரு வினிக், திரு வ பொன்னம்பலம், உடுவில் எம்.பி. திரு வி. தருமலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

கோப்பாய், திங்கள்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த 25 ஆண்டுகாலமாக தமிழ் விரிவுரையாளராக கடமையாற்றி வந்த பண்டிதர் திரு. சி. கந்தையா காலமானார். நேற்று முன்தினம் நடைபெற்ற இவரது ஈமக் கிரியைகளில் பாடசாலைஆசிரியர்கள் மாணவர்கள் பழைய மாணவர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

## லண்டன் பயணம்

சுழிபுரம், திங்கள்

உயர்கல்வி கற்பதற்காக லண்டன் செல்லவிருக்கும் செல்வன் சி. செல்வராசா, செல்வன் க. விக்னராசா ஆகிய இருவருக்கும் மயிலிட்டி தெற்கு கட்டுவன் வறுத்தலைவிளான் வாலிபர்கள் இராப்போசன விருந்தொன்று அளித்து பாராட்டினர்.

## வரவேற்க ஏற்பாடு

சுழிபுரம், திங்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் யாழ்ப்பாணம் வருகைதரும்போது, சுழிபுரம் பகுதி மக்கள் சார்பில் வரவேற்புவிழாஒன்றைநடாத்த சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஜே. பி. ஏற்பாடுசெய்துவருகின்றார்.

## புதிய ஆய்வுகூடம்

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை மத்திய மகாவித்தியாலய விஞ்ஞான மாணவர்களின் வசதியை முன்னிட்டு கல்வித்திணைக்களம் புதிய ஆய்வுகூடமொன்றை அமைத்துவருகின்றது. அடுத்தமாதபிற்பகுதியில் இதை திறந்துவைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## நாத்திகம் ராமசாமி

சென்னை, செப், 8

நாத்திகம் ராமசாமி பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தியைப்பற்றி எழுதியும் பேசியும் வருவதைக் கண்டித்து அவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வாக்கு

சத்தியத்தையும் அன்பையும் உபாசிப்பவன் நாளைக்காக ஒன்றும் சேமித்து வைக்கமாட்டான்.
— மகாத்மாகாந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 24-ந் திகதி 9-9-69)

## இராணுவம் எதற்கு?

இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது சதி வழக்கு தொடரப்பட்டு சில முக்கியஎதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். முன்னரும் ஒரு சதி வழக்கு நடந்து முடிவில் பல எதிரிகளும் விடுதலைசெய்யப்பெற்றனர். இப்போ சதி வழக்கு தொடர்ந்து நடைபெறுவதால் இதைப்பற்றி நாம் எவ்வித கருத்தும்கூறுவது முறையாகாது.

ஆனால் கட்சி அரசாங்கங்கள் மாறும்போது சில இராணுவ அதிகாரிகள் சந்தேகத்துக்கு உள்ளாவதும் சதி வழக்குகள்நடந்து விசாரணை வருடக்கணக்கில் நீடிப்பதும் அநேகமாக வழக்கமாகி விட்டன. இதற்குப் பெரும் செலவாவது ஒருபுறமிருக்க நாட்டுக்கும் அதன் பாதுகாப்புக்கும் பாறுப்பான இராணுவத்துக்கும் இது நல்லதல்ல. பொதுத்தேர்தல்மூலம் வேறு கட்சிகள் ஆட்சிக்கு வரும்போது, தங்கள்மீது, சதிவழக்குகள் நடக்குமோ என்று இராணுவ அதிகாரிகள் சந்தேகித்து பீதியுடன் இருக்க வேண்டிய அபாய நிலையும் உருவாகியிருக்கின்றது.

உண்மையான சுதந்திரஇந்தியாவில் இராணுவம் இருப்பதையே மகாத்மா காந்தி விரும்பவில்லை. அதற்கு முன்னைவிட அதிகமான செலவாகுமென்றும் அதைத்தாம் ஒப்பமுடியாதென்றும் கூறியதுடன், இராணுவத்தைப்பற்றி தாம் அஞ்சுவதாகவும் குறிப்பிட்டார். இராணுவ ஆட்சியும் இந்தியாவில் ஏற்படக்கூடிய ஒரு நிலை உருவாகலாமென்றும் கருதினார். 'நான் இராணுவத்தைப் பல்லாண்டுகளாக விரும்பவில்லை. இப்போதும் அவ்விதகருத்தேகொண்டுள்ளேன். ஆனால் பலர் இதை ஒப்பாமல் இருக்கலாம். பல ராஜ்யங்களிலும் கலவரங்கள் ஏற்பட்டு இராணுவ உதவியைக் கேட்கிறார்கள். இதுபற்றி விழித்துக் கொள்ளாவிடில் இராணுவ சர்வாதிகார ஆட்சி ஏற்படக்கூடும். அதுதான்சுதந்திரமா' என்று கேட்டார் மகாத்மா.

பலவிதங்களிலும் மேலாகும். இந்தியாவுக்கு எல்லைத்தகராறுகளும் பாகிஸ்தான், சீனம் முதலிய பிரச்னைகளுமுண்டு. ஆனால் நல்ல வேளையாகஇலங்கையிலுள்ள நமக்கு அவ்வித சிக்கல்கள் எதுவுமில்லை. இந்நிலையில் நமக்கு இராணுவம் எதற்காக? சுதந்திரமடைந்த பின்சென்ற20வருடகாலத்திலே இலங்கை இராணுவம், வடக்கு கிழக்குமாகாணங்களில் மொழிப்போராட்டத்தின்போதும், கொழும்பிலே ஹர்த்தாலின்போதும் பயன்படுத்தப்பட்டதுடன், கள்ளக்கடத்தல் கள்ளக்குடியேற்றம் இவற்றைத் தடுப்பதற்கென்று கூறி வடக்கேநிரந்தரமாக காவலுக்கு வைக்கப்பட்டுள்ளது. வெளிஆபத்துகள்நமக்கு எதுவுமில்லை. உள்நாட்டிலே மக்களின் சம்மதத்துடன், மக்களாலேயே உண்மையான ஜனநாயக ஆட்சி நடப்பதாயின், இராணுவத்துக்கான எவ்வித அவசியமும் இருக்கவே தேவையில்லை.

அணுகுண்டு சகாப்தத்திலே இலங்கை போன்றசிறிய நாடுகள் இராணுவத்தால் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவதென்பது முடியுமா? பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட இராணுவத்தை நாம் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய அவசியமென்ன? பலகட்சித் தலைவர்களும் இதைப்பற்றி யோசித்து, இராணுவத்தைக் கலைத்து விடுவதாயின், நாட்டுக்கு ஒருவித நஷ்டமும் ஏற்பட்டுவிடாது. இதற்கு மாறாக அதிகபணம் மிச்சமாவதுடன் இலங்கையின் மதிப்பும் புகழும் உலகிலே மேலோங்கி, மற்றநாடுகளுக்கும் இலங்கை மேலான முன்மாதிரிகாட்டுவதாக இருக்கும்- இராணுவத்தால் இங்கு மக்களுக்கு நன்மையைவிட தீமையே அதிகமாக இருப்பதால், இராணுவத்தை முற்றிலும் கலைக்க முடியாவிடிலும், அதைப் பெரிதும் குறைத்து விடுவதே மேலாகுமல்லவா? அப்படிச் செய்வதால் இங்கு மக்கள்

---

ஆட்சி மன்றத்திலே

நமது சபை நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

# குடும்பக்கட்டுப்பாடு சிங்களவரை சிறுபான்மையாக்குமா?

## வலப்பன எம். பிக்கு நாகநாதன் சூடான பதில்!

வருடாவருடம் தங்கள் அமைச்சுக்குத் தேவையான மான்யத்தைப் பெறுவதற்காக நாட்டு மக்களின்பிரதிநிதிகளடங்கிய ஆட்சிமன்றத்தின் முன்வந்து எதிர்க்கட்சியினரின் கழுகுக் கண்களுக்கு இரையாகாமல் அவர்களது கண்டனங்களையெல்லாம் சமாளிக்கவேண்டியிருப்பதை - அதனால் ஏற்படும் வேதனையைப் பிரசவ வேதனைக்கு ஒப்பிடுவது சாலப் பொருத்தமானது.

இதனை மனதிற்கொண்டு ஆட்சிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளையொட்டி நடைபெற்ற விவாதத்தை பார்த்தால்சுகாதார அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயகாவைப் பொறுத்தமட்டில் அது ஒரு 'சுகப்பிரசவம்' என்றுதான் வர்ணிக்கவேண்டும்.

எதிர்க்கட்சியினரும் அரசாங்க தரப்பினரும் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக்கொண்டு சுகாதார அமைச்சருக்கும் அவரது துணை அமைச்சர் 'மலர்ந்த முகத்தோடு பொறுப்புக்களை சுமந்து கொள்ளும்' திருமதி விமலா கன்னங்கராவுக்கும் புகழாரம் சூட்ட முனைந்தனர்.

தங்கள் தங்கள் தொகுதிகளிலுள்ள மருத்துவ மனைகளில் உள்ள குறைபாடுகளை சபாநாயகர் அளித்த ஐந்து மணித்துளி பத்து மணித்துளி 15 மணித்துளிகளில் சொல்ல முற்பட்டபோதும் சுகாதார அமைச்சரையோ துணை சுகாதார அமைச்சரையோ கடுமையான வார்த்தைகளால் தாக்கவில்லை. அமைச்சரின் சிரமங்களையும் நிதிப் பற்றாக்குறையையும் உணர்ந்து குறைபாடுகளுக்கு நிவாரணம் தேட முயற்சிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா அண்மையில் காலஞ்சென்ற வண கொட்டகம வஜ்சிஸ்ஸாரதேரோவுக்கு நடத்தப்பட்ட சத்திரசிகிச்சையில் பெறுப்புடன் கடமை

அரசியலுக்கும் அர்ப்பணித்துவிட்ட டாக்டர் நாகநாதனுக்கு எரிச்சலை மூட்டியது ஒரு விஷயம் 'காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்' என்ற தோரணையில் எதற்கெடுத்தாலும் அமெரிக்கர்களையும் அவர்களது துப்பறியும் இலாகாவான சி ஐ ஏ யைக் குற்றம் சாட்டிக் கம்யூனிஸ்ட் கட்சியினர் பேசுவது தான் வண கொடகம தேராவின் மரணத்துக்கும் பின்னால் சி ஐ ஏ யின் சதித்திட்டம் தான் காரணம் என்று மாத்தறை எம் பி துடாவை பேசினார் ஸ்டாலின் காலத்து ரஷ்யாவில் வேண்டுமானால் அப்படியானகொலைகள் நடந்திருக்கலாம்; இப்பொழுது சீனவில் நடக்கிறதோ என்னவோ தெரியாது; ஆனால் இலங்கையில் அப்படி எதுவுமே இதுவரையும் நடக்கவில்லை; இனிமேலும் நடக்கவே நடக்காது'' என்று ஆரம்பித்தார்டாக்டர் நாகநாதன்.

பொறுப்பற்ற முறையில் கண்கண்ட குற்றச்சாட்டுக்களையெல்லாம் எதிர்க்கட்சியினர் கொண்டு வந்து ஆட்சிமன்றத்தில் அம்பலப்படுத்துவதாகச் சொன்ன டாக்டர் கொஞ்சம் புத்தி சாதுர்யமாகப் பேசக் கற்றுக் கொள்ளுங்கள் டாக்டர் என் எம் போன்றவர்கள்கூட பொறுப்பற்ற முறையில் சில வேளைகளில் பேசுவது இந்தக் கௌரவ சபைக்கே அவமானமாக இருக்கிறது என்று வருத்தப் பட்டுக் கொண்டார்

### குடும்பக் கட்டுப்பாடு

''காதலுக்கு வழிவகுத்து கருப்பாதை காத்த வழியொன்று கண்டோம்-இதில் என்ன குற்றம்?'' என்று குடும்பக்கட்டுப்பாட்டு பிரச்சாரம் செய்தான் புதுயுகக் கவிஞன் பாரதிதாசன்

''உற்பத்தியை நாம் பெருக்க வேண்டும்'' என்று டாக்டர் நாகநாதன் ஆரம்பித்த போது சபையினர் கொல்லென்று சிரிக்கவே நான் பிள்ளைகள்உற்பத்தியைச் சொல்லவில்லை; நாட்டின் பொருளாதாரஉற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றுதான் சொல்லுகின்றேன்'' என்றுசொல்லிவிட்டு வலப்பனை எம் பி திருரி பி எம் ஹேரத்துக்கு சாட்டையடி கொடுப்பதில் இறங்கினார் டாக்டா நாகநாதன்

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் இந்நாட்டில் சிங்களஇனத்தை இனத்தை அழிக்கும் திட்டம் சிங்கள மக்களை விகிதாச்சார அடிப்படையில் சிறுபான்மையினமாக ஆக்கும் முயற்சிதான் இது என்று வலப்பனை எம் பி பேசியதை மறுத்து குடும்பக் கட்டுப்பாடு இந்த நாட்டுக்கு அவசியம்தான்: குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் எந்த இனத்தையும் அழிக்க முடியும் என்று நினைப்பது படுமுட்டாள்தனமென்று பட்டவர்த்தனமாகவலப்பனை எம் பிக்குப்பாடம் புகட்டினார்

சுகாதார அமைச்சர் திரு ஈ எல் சேனநாயகா பதிலளிக்க எழுந்த போது எந்தச் சிரமமுமில்லாமல் தனது பணியைச் செவ்வனே செய்து முடித்தார்

---

# 'குறள் படிப்பீர் குறள் வழி நிற்பீர்'

— புலவர் கே. கோவிந்தன் —

(தமிழக சட்டமன்ற சபாநாயகர் புலவர் கே.கோவிந்தன் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் சார்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின் போது நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் தொகுத்தளிப்பவர் நெல்லை க [illegible]பேரன்)

[illegible]று நீங்கள் எனக்கும் எனது பாரியாருக்கும் காட்டிய அன்பும்-வரவேற்பும் என் உள்ளத்தைத் தொட்டு விட்டன [illegible] [illegible] மறக்காத தமிழர் [illegible] த்தியில் நான் இருக்கி

என்று மனித வாழ்க்கைக்கு இலக்கணம் அமைத்த மொழி தமிழ்மொழிதான், இன்று நாகரிக காலத்தில் மக்கள் வாழ்கிறார்கள், சந்திரனுக்குச் சென்று வந்த அப்பலோ-11 கலத்தின் விரைவு யுகத்தில் மக்கள் வாழ்கிறார்கள் ஆனால் எது நாகரிகம் என்பது [illegible]யாமல் தடுமாறுகிறார்கள்

### சென்னை விபத்தும் சேரிப்பெண்ணும்

[illegible] த்தில் சென்னை 'மவுண்ரோட்டில்' நடை பெற்ற சம்பவம் ஒன்[illegible]

பிரியப்போகிறேன். என்றாலும் ஈழத்தமிழரின் அன்பையெல்லாம் சுமந்து செல்வேன் என் தமிழர் திண்மையெல்லாம் எடுத்துரைப்பேன் குறள் படிப்பீர் குறள் வழி நடப்பீர் வாழ்ந்து 'வையகத்து வாழ்வாங்கு வாழ்பவன்' என்ற பெயரோடு உயர்வீராக

### கொழும்பு . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையில் ஈடுபட்டவர்கள் சுங்க காரியாலயத்தில் தண்ணீர் குடித்த கிண்ணத்

---

# ஐயாறன் எழுதுவது

நல்லூரிலிருந்து முருக பக்தர்களில் ஒருவர் எழுதுவது:

நூற்றுக்கணக்கான மக்கள் நல்லூர்க்கந்தனின் அருள் வேண்டி பல மைல்களுக்கு அப்பால் இருந்து வருகிறார்கள். சென்றவிழாக்களில் பக்தர்கள் கோவிலுக்குள் தரையில் அமர்ந்து தரிசித்தனர். சென்ற இரு தினங்களாக, எல்லோரும் எழுந்து நிற்க வேண்டுமென்று செய்துள்ளதால் முன் வரிசையிலுள்ளவர்கள் தான் தரிசிக்க முடிகிறது. தீபாராதனை நடக்கையில், முன்னேயுள்ளவர்கள் சிரம் குவிக்கும் கைகளைத்தான் பின் இருப்பவர்கள் பார்க்க வேண்டியுள்ளது. முருகனையோ, கற்பூர தீபத்தையோ பார்க்க முடிவதில்லை. அதுவும் சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் பெரும் சங்கடமாகவுள்ளது.

காலை 9 மணியிலிருந்து பகல் 12 மணிவரை யாவரும் நிற்பதால், காற்றும் இல்லாமல் வெயர்த்து மயங்குகிற நிலை ஏற்படுகிறது. ஆகையால் இப் புதிய முறையைத் தவிர்த்து, வழமை போல் எல்லாரும் முருகனை தரிசிக்கக்கூடிய வகையில் உதவுமாறு கோயில் பரிபாலகரையும், சம்பந்தப்பட்டவர்களையும் தயவு கக் கேட்கின்றேன்.

இதைப்பற்றிக் கோவிலுக்கு டெலிபோன் செய்து விசாரித்ததில், நின்று பார்ப்பதால் அதிகமானவர்கள் தரிசிக்க முடிவதாயும், வசந்த மண்டபத்திலே உயர்ந்த இடத்தில் சுவாமி இருப்பதால், தெருவில் நின்றும் நன்கு தரிசிக்கலாமென்றும் தெரிவித்தனர். பலர் கேட்டுக் கொண்டதன் மீதே இந்த மாறுதல் செய்யப்பட்டதாம் சிலர் முன்கூட்டியே சென்று கோவில் சந்நிதியில் உட்கார்ந்துவிடுவதால் கோவிலுக்குள் நுழையவும் மற்றவர்களுக்கு முடியாமல் போவதாகவும் தெரிவித்தனர்.

0 0 0

''தேசிய கல்விமான்கள்' என்று சிலரைத் தெரிவு செய்து அவர்கள் 60-வது வயதில் ஒய்வு பெற்றதும், அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய்உதவிப்பணத்தை இந்திய அரசாங்கம் அளித்து வந்தது. இனி மாதமொன்றுக்கு அவர்களுக்கு ரூ. 2500 அறுபத்தைந்து வயதுவரை கொடுத்து பின்னர் மாதம் ஆயிரம் என்று இறக்கும்வரை கொடுப்பதென்றும் அவர்கள் வசதியாக வாழ்ந்து, மக்களுக்குத் தங்கள் அறிவாற்றல்களைப் பயன்படுத்தி உதவவே இவ்விதம் இந்திய அரசு செய்திருப்பதாகவும் தெரிகிறது.

இது மிக நல்ல ஏற்பாடு. கல்வியாளர் அல்லது அறிஞர்கள் வயோதிபத்தில் வருமானமில்லாமல் ஏழ்மையால் அவதிப்படுவது சர்வசகஜம். மேலைநாடுகளில் பல தர்மஸ்தாபனங்கள் இவ்வித அறிஞர்களுக்கு உதவி செய்கின்றன. ஆனால் இந்தியாவிலோ இலங்கையிலோ அவ்விதமெதுவுமில்லை. ஆகவே இந்தியாவைப் போல் இலங்கையிலும் இவ்வித உதவிப் பணம் அளிப்பது பலவிதங்களிலும் நன்மையாகும்.

இலங்கை அரசாங்கம் இவ்வித ஏற்பாடு செய்தால், தமிழருக்கு உதவி கிடைப்பது குதிரைக் கொம்பாகலாமென்கிறார் ஓர் அன்பர் முதலில் இந்த நல்ல காரியத்தை இங்கு அரசாங்கம் செய்யட்டும். தமிழருக்கு நியாயம் கிடைத்த பின்னர் போராடலாம்தானே.

0 0 0

நல்லூர் திருவிழாவையொட்டி நயினாதீவு முதலிய பல தூர இடங்களிலிருந்தும் இன்று அதிகாலை அடியார்கள் பஜனை யாத்திரையை ஆரம்பித்து கால்நடையாக நல்லூருக்கு நாளை தேரில் வரும் முருகனை தரிசிக்க, பக்தியைப் பரப்பிக் கொண்டே வருகின்றார்கள். நல்ல புண்ணியம்.

இறைவன் புகழைப் பாடப்பாட இன்பம். கேட்கக் கேட்க இன்பம். செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே. இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே.

0 0 0

நல்லூரான் திருவடியைப் பாடு. நாமே நாம் என்று சொல்லி நாடு கல்லுங்கரையக் கவி சொல்லு, காமக் குரோதத்தை வெல்லு

— நற்சிந்தனை

# சினிமாவுக்குள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுவ உதவியைக் கேட்கிறார்கள். இதுபற்றி விழித்துக் கொள்ளாவிடில் இராணுவ சர்வாதிகார ஆட்சி ஏற்படக் கூடும். அதுதான்சுதந்திரமா' என்று கேட்டார் மகாத்மா.

இந்தியாவுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் நிலைமை மாக இருப்பதால், இராணுவத்தை முற்றிலும் கலைக்க முடியாவிடினும், அதைப் பெரிதும் குறைத்து விடுவதே மேலாகுமல்லவா? அப்படிச் செய்வதால் இங்கு மக்கள் அதிக நிம்மதியாக வாழவும் முடியும்

## பாரபட்சம்

கொழும்புப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனத்தில் அப்பட்டமான பாரபட்சமும், வகுப்பு வாதமும் காட்டப்பட்டுள்ளது. திறமை, அனுபவம் முதலிய எல்லா விதங்களிலும் மற்ற மூவரையும்விடச் சிறந்து விளங்கியவரும், ஏற்கனவே பன்முறை அப்பதவியைத் தற்காலிகமாக வகித்தவருமான பேராசிரியர் மயில்வாகனம் அவர்களின் பெயரை பூர்வாங்கத்தெரிவிலேயே தேசிய உயர் கல்விச்சபை நிராகரித்துவிட்டதன் காரணமென்ன? பேராசிரியர் அவர்கள் ஒரு தமிழராகப் பிறந்துவிட்ட குற்றந்தானா? இவ்விஷயமாக உயர் கல்விச்சபை செய்த முடிவு, இந்நாட்டிலே பல்கலைக்கழகத்துக்குத் திறமையான ஒருவரின் சேவை கிடைக்க முடியாமற் போவதுடன் வகுப்புவாதம் தலைதூக்கவும், தமிழர்களின் நம்பிக்கையையும், அபிமானத்தையும் அரசாங்கம் இழக்கவும் கூடியதாகவுள்ளது. தமிழரின் இரு முக்கிய கட்சிகளும் இவ்விஷயத்தில் உடன் கவனஞ்செலுத்தி, தக்க நடவடிக்கைகளை உடன் எடுக்கவேண்டும். பிரதமரும், கல்வி அமைச்சரும் இதற்குச் சரியான பதில் அளிப்பதுடன், பாரபட்சம் காட்டிய தேசிய உயர் கல்விச்சபையை கலைத்தும்விடுவது பல விதங்களிலும் நல்லதும், அவசியமுமாகும்

## நல்லூர்க்கந்தன் பாமாலை

யாழ்ப்பாணம், செவ்.

அளவையூர் அருட்கவி இயற்றிய நல்லைக்கந்தன் பாமாலை என்னும் நூல் நாளை நல்லூர் கந்தன் ரதோற்சவத்தன்று யாழ்ப்பாணம் "ஸ்டீல்சன்ஸ்" ஸ்தாபனத்தாரால் இலவசமாக வழங்கப்படவிருக்கின்றது.

## நம்பாலை கொலை வழக்கு

மல்லாகம், திங்கள்

அச்சுவேலி தம்பாலை வழக்கு முயற்சி வழக்குத் தீர்ப்பு வழங்குவதை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எஸ். ஆனந்தக்குமாரசாமி இம்மாதம் 15ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

தம்பாலையைச் சேர்ந்த குமார் ஐயாத்துரை (வயது 9) என்ற சிறுவனைக் கொலை செய்ததாக அத்தயிடத்தைச் சேர்ந்த ஆர். நாகேஸ்வரன், எஸ். ஆனந்தராசா ஆகிய இருவருக்கும் எதிராக இவ்வழக்கை காங்கேசன்துறைப் பொலிஸார் தொடர்ந்துள்ளனர்.

## விசாரணையின் பின் விடப்பட்டனர்

யாழ்ப்பாணம், செவ்.

மட்டக்களப்பில் நடைபெற்ற பஸ் கொள்ளை சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலிருந்து சந்தேகத்தில் கொண்டு செல்லப்பட்ட இமானுவேல், மரியாம்பிள்ளை, சத்தியநேசன் ஆகிய மூவரும் விசாரணை செய்யப்பட்ட பின்னர் திருப்பி அனுப்பப்பட்டனர். (கா நி)

## மரண அறிவித்தல்

**சிவ ஸ்ரீ நா. நடராசக்குருக்கள்**

மாதகல், நுணசை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் வேதசிவாகமப் பண்டிதர் சிவ, ஸ்ரீ நா. நடராசக் குருக்கள் அவர்கள் சிவபதமடைந்து விட்டார்கள். அவர்களின் ஈமைக்கிரியைகள் இன்று காலை 8 மணியளவில் மாதகல் போதிமயானத்தில் நடைபெறுமென்பதை அன்னாரின் உறவினர் நண்பர்களுக்கு அறிவிக்கிறேன். சி. கணபதிப்பிள்ளை (ஷ தேவஸ்தான அதிபர்) 1389

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மதி ஸ்ரீமா பண்டாரநாயகா அண்மையில் காலஞ்சென்ற வண கொட்டகம வஜ்சிஸ்ஸாரதேரோவுக்கு நடத்தப்பட்ட சத்திரசிகிச்சையில் பெறுப்புடன் கடமையாற்றவேண்டிய டாக்டர்கள் பொறுப்புணர்ச்சியின்றி உதாசீனமாக நடந்து கொண்டதால்தான் அவரது மரணம் சம்பவித்தது என்று அரசியல் ரீதியில் சத்திர சிகிச்சை செய்ய ஆரம்பித்தபோது சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு - குறிப்பாக கொழும்பு பெரியாஸ்பத்திரியிலுள்ள அதிகாரிகளுக்கு - 'பவர்புல் இஞ்ஜெக்ஷன்' ஒன்று கொடுக்கப் போகிறார் என்றுதான் நினைத்தோம் ஆனால் அவர் கொடுத்தது என்னவோ சில கசப்பான மாத்திரைகள் தாம்!

வண கொட்டகமவஜ்சிஸ்ஸார தேரோவின் மரணத்தைப் பாடமாகக் கொண்டு மருத்துவ மனைகளிலே நடக்கும் ஊழல்களை சுத்திகரிக்க உடனடி நடவடிக்கைஎடுக்க வேண்டும். வண கொட்டகம வஜ்சிஸ்ஸார தேரோவின் மரணத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பாரபட்சமற்ற கமிஷன் ஒன்று நியமிக்கவேண்டும் -இவைதான் ஸ்ரீமாவின் பேச்சின் உள்ளடக்கம்.

தலைவியின் கடிதச் சுவட்டைப் பின்பற்றி என். எம்.மும் தொடர்ந்து 'உலகின் ஏனைய நாடுகளிலெல்லாம் இருதயங்களை மாற்றி வைத்து வெற்றிகரமாகச் சத்திரசிகிச்சைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இலங்கையின் மிகப்பெரிய ஆஸ்பத்திரியான கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சாதாரண சத்திரசிகிச்சை செய்வதுகூட ஆபத்தாக இருப்பது வேதனைக்குரிய விஷயம் என்று சொல்லி வண கொட்டகம தேரோவின் மரணத்தை தடுத்திருக்கக் கூடிய வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தும் அதிகாரிகளின் உதாசீனப் போக்கினால் இந்தப் பேரிழப்பு ஏற்பட்டது எனச் சாடினார்.

### டாக்டர் நாகநாதன்

இவர்களைத் தொடர்ந்து திரு லெஸ்லி குணவர்த்தனா மாத்தறைதுடாவை போன்றோரும், இலங்கையின் மருத்துவ சேவையைக் குறை கூறி, வண கொட்டகம தேரோவின் மரணத்தை முன்வைத்து ஒப்பாரிபாடியது நல்லூர் டாக்டர் நாகநாதனுக்கு ஆத்திரத்தை மூட்டிவிட்டது.

தனது வாழ்க்கையின்முற்பகுதியை மருத்துவத்துக்கும் பிற்பகுதியை

...று நீங்கள் எனக்கும் எனது பாரியாருக்கும் காட்டிய அன்பும்-வரவேற்பும் என் உள்ளத்தைத் தொட்டு விட்டன. தமது தாய் நாட்டை மறக்காத தமிழர்கள் மத்தியில் நான் இருக்கிறேன் என்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன். எங்கே வாழ்ந்தாலும் தமிழன் தனது பண்பாட்டை ஒரு போதும் மறக்கமாட்டான் என்பதற்கு எடுத்துக் காட்டாக ஈழத்தமிழகம் என்னை வரவேற்கிறது கண்டு மகிழ்கிறேன்

### வந்தாரை வாழவைப்போம்

'இங்குள்ள மலையக மக்களின் பிரதிநிதியான ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அண்ணாமலை பேசும்போது, 'மலையகத்திலிருந்து தாயகம் நோக்கிவரும் தொழிலாளத் தோழர்களைத் தமிழகத்தில் நல்ல முறையில் கவனியுங்கள்' என்று கேட்டுக்கொண்டுள்ளார். வந்தாரை வரவேற்று வாழவைக்கும் பண்பு தமிழனுடையது. மத்திய அரசு மறுத்தாலும் சரி அல்லது தக்கவசதிகளைக் கொடுக்கத் தயங்கினாலும் சரி எமது இனத்தவர்களை-இந்த நாட்டின்வளத்திற்காக வியர்வை சிந்திப் பல காரணங்களாலும இன்று தாயகம் திரும்புகிறவர்களைத் தாயன்போடு வரவேற்று வாழ்வளிக்க எமது தமிழக அரசு காத்திருக்கிறது. தமிழகம் திரும்பும் மக்களுக்குத் 'தமிழ்நாடு' வாழ்வளிக்குமோ அளிக்காதோ என்ற ஐயம் உங்களுக்குத் தேவையே இல்லை தாராளமாக வாருங்கள் வரவேற்கக் காத்திருக்கிறோம்

### திருக்குறள்

திருவள்ளுவர்உலகமொழிகளுக்கெல்லாம் - மதங்களுக்கெல்லாம்- இனங்களுக்கெல்லாம் பொதுவான நூலை ஆக்கித்தந்துள்ளார் - வள்ளுவர் எந்தச் சமயத்தவர்? எப்படி இருப்பார்? எப்போது வாழ்ந்தார்? என்பனவற்றுக்கெல்லாம் சான்றுகளே கிடையாது. மணிமேகலையில் பாத்திரம் 'பொய்யில் புலவன் சொன்ன' என்ற ஒரு வரியிருக்கிறது. இதனோடு குறள் வரியொன்றும் வருகிறது. இதைவைத்துக் கொண்டுதான் வள்ளுவரின் காலத்தை எம்மால் கணிப்பிட முடிகின்றது. ஆங்கிலத்தில் பைபிளைவிட இன்று உலக மொழிகளில் அதிகளவு மொழிபெயர்க்கப்பட்டுள்ள பொதுநூல் திருக்குறள் ஒன்றுதான். உலகத்தின் எந்த மொழிக்காரனுக்கும் உரிய உயர்ந்த கருத்துக்கள் குறளிலுள்ளன அகத்திணை, புறத்திணை

### சென்னை விபத்தும் சேரிப்பெண்ணும்

சமீபத்தில் சென்னை 'மவுண்ரோட்டில்' நடை பெற்ற சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன்.

கார் விபத்தில் சிக்கிய ஒருவனை அங்கே வீதியில் சென்றுகொண்டிருந்த பெரிய மனிதர் எவரும் காப்பாற்றவில்லை: மதுரையிலிருந்து கட்டிடங்கள் புதிதாகக்கட்டும் இடத்தில் 'சிற்றாள்' வேலை செய்யும் பெண்ணொருத்தி தனது மூக்குத்தியை விற்று ஒரு டாக்சியை வரவழைத்து அடிபட்டவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றாளே - அடடா அந்த மனித உள்ளமும் அதன் பண்பாடும் இதில் யார் நாகரிகமானவர்கள்? நாகரிகத்திரை போட்டு மறைத்துக் கொண்டு விரையும் உலகில் அலைந்துதிரியும் போலி மாந்தர்களா? அல்லது உண்மையான உள்ளம்கொண்ட உத்தமியா? இதை மக்கள் நன்றாக உணரவேண்டும்

தாய் கொடும்பசியில்வாடினாலும் அவளுக்காகக் கையேந்திப் பிச்சை எடுக்காதே என்று சொல்கிறார் வள்ளுவர். வள்ளுவர் சொன்ன குறள்வழி ஒழுகினால் எமது மக்கள் மத்தியில் நிலவும் காழ்ப்புணர்ச்சி, போராட்டம் எதுவுமே தோன்ற நியாயமில்லை. எமது நாட்டிலே வாழ்கின்ற மற்ற இனத்தவர்களைத் தீயவர்கள் என்று சொன்னால் அப்படிச்சொல்கின்ற நாமும் தீயவர்தான் அவர்கள் தீயவர்களாவதற்கு நாமும் காலாகஇருக்கிறோம் என்பதுதான் அர்த்தம் நாம் நல்லவர்கள் என்கிற காரணத்தால் தீயவர்களையும் நல்லவர்களாக்கமுனைதல் வேண்டும்

ஈழநாடுமிக நல்லநாடு ஒரு நாடு நல்லது என்று சொல்லும்போது அதுபாலைவனங்கள் மிகுந்ததாக இருக்கலாம் மலர்ச்சோலைகள் மிகுந்ததாகஇருக்கலாம் மரக்காடுகள்மலிந்ததாக இருக்கலாம் ஆனால் அங்குவாழும் மக்கள் நல்லவர்களாக இருந்தால் நாடும் நல்ல நாடுதான் இத்தகைய நல்லதைத்தான் ஈழத்திலும் காண்கிறோம்

### ஈழத்து உணவும்

சங்க இலக்கியங்களில் ஈழத்து உணவும் காளகத்து ஆக்கமும்' என்று படித்துமகிழ்ந்தேன் இன்று ஈழத்தைக் காணும் வாய்ப்பு நேரில் கிடைத்தது இம்மாதம்11-ந் திகதி தமிழக சட்டமன்றம் மீண்டும் கூடுகிறது அதைக் கூட்டவேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்தது ஆதலால் குறுகிய காலத்திலேயே உங்களை விட்டுப்

## கொழும்பு . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையில் ஈடுபட்டவர்கள் சுங்க காரியாலயத்தில் தண்ணீர் குடித்த கிண்ணத்தில் கிடந்த கைவிரல் அடையாளங்களும், கடத்திச் செல்லப்பட்ட சுங்க 'ஜீப்' பில் கிடந்த கைவிரல் அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன

மாங்குளம் காட்டுக்குள் சுங்க 'ஜீப்' விடப்பட்டு நின்ற இடத்துக்கு அண்மையில் தெரிந்த மற்றொரு மோட்டார் வண்டியின் 'டயர்' அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து சந்தேகத்துக்கிடமான பல மோட்டார் வண்டிகளின் டயர் அடையாளங்களை பொலிஸார் கடந்த இருதினங்களாகப் பரிசோதித்துவருகின்றனர்.

கடைசியாகக் கிடைத்த ரகஸிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து குறிப்பிட்டஒரு இடத்துக்கு சுமார் 15பொலிஸார் சாதாரண உடையில் கண்காணிப்புச் செலுத்த நேற்று நண்பகல் அனுப்பி வைக்கப்பட்டதாகபொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

களவுபோன பொருட்களின் தொகை இப்போதுதான் மதிப்பிடப்பட்டு வருவதாகவும் இவை சுமார் 50 லட்சம்வரை இருக்கலாமெனவும் சுங்கப்பகுதி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார், புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (கா. நி,)

## வாகனங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனையிடப்படல் வேண்டும் என்றும், அவைகளின் இலக்கத்தையும், எத்தனை மணிக்குச் சென்றவையென்றும் ஆனையிறவு தடைமுகாமிலுள்ள பதிவுப் புத்தகத்தில் பதிய வேண்டும் என்றும் இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி)

## 'விபத்துக்களை தடுக்க உதவும்'

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை வங்காள வடியில் வீதிவிபத்துக்கள் ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறு வேலணைக் கிராமசபைத் தலைவரிடம் வேலணை மறுமலர்ச்சிக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. இவ்விடத்தில் இரு பாடசாலைகள் இருப்பதால் மாணவர்கள் வீதி விபத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவர்களுக்கு மாதம் ஆயி

# சினிமாவுக்குள்ளும் நுழைகிறார், இந்தத் தமிழ்வாணன்!

சமீபத்தில் இலங்கைக்கு வந்து வழக்கமான புரட்சிகரமான கருத்துக்களை இங்கும் கூறிப் பலத்த தாக்குதலுக்குள்ளான 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணன் ஒருபெரிய 'பிஸினஸ்' பேர்வழி. பத்திரிகை ஆசிரியராக இருப்பதுடன் மட்டுமல்லாமல், எழுது எழுதென்று புத்தகங்களை எழுதிக் குவித்து அந்த மருந்து இந்த மருந்தென்றெல்லாம் தயாரித்து, கைரேகை சாத்திரம் பார்த்து பல பிஸினஸ்களைச் செய்துவந்த இவர், இப்போது சினிமாப் படவுலகிலும் கைவைத்திருக்கிறார். எந்த பிஸினஸை எந்தமுறையில் செய்யவேண்டுமென்ற 'ஸ்ரற்றிக்' தெரிந்தவர் இவர்!

தெலுங்குப்படங்களைத் தமிழில் டப் செய்யத் தொடங்கியிருக்கிறார். 'துடிக்கும் துப்பாக்கி', 'பிள்ளைப் பாசம்' போன்ற பல தெலுங்குப்படங்களை இவர் டப் செய்து தமிழில் தரவிருக்கிறார். நாகேஸ்வரராவ், ரங்கராவ் போன்ற பிரபல தெலுங்கு நடிகர்கள் இப்படங்களில் நடிக்கிறார்கள்.

விளம்பரம் போடுவதிலும் புதுமை செய்கிறார். "பயப்படுகிறவர்களால் வாழ்க்கையில் முன்னேறமுடியாது, நீங்கள் எதற்கும் பயப்படாமலிருக்க, தமிழ்வாணன் தரும் இந்தத் திரைப்படத்தைத் தவறாமல் பாருங்கள்' என்று, தனது டப்பண்ணும் தெலுங்குப் படத்துக்கு இப்படிக் கவர்ச்சியாக விளம்பரம் செய்துள்ளார்.

### சுக்கிரனைப் பற்றி. . .

பூமியும் சுக்கிரனும் பல வகைகளில் ஒரே மாதிரியானவை. பூமியின் விட்டம் 12,750 கிலோமீட்டர். சுக்கிரனின்விட்டம் 12,100 கிலோ மீட்டர். சந்திரனையும், சூரியனையும் தவிர்ந்த ஏனைய எல்லாக்கிரகங்களிலும் பிரகாசமானது சுக்கிரனே. அதிகாலையில்தான் சந்திரன் தோன்றுகிறது சூரியனுக்கும் சுக்கிரனுக்குமிடையேயுள்ள சராசரி தூரம் 10.3 கிலோமீட்டர் ஆகும். அங்கே சூரியனின் வெப்பம் பூமியில் படியும் வெப்பத்தை விட இரண்டு மடங்காகும். சுக்கிரன் சூரியனை வலம்வர 225 நாட்கள் ஆகும். அது தன்னைத் தானே சுற்றிவர 250 நாட்கள் பிடிக்கின்றன.

சுக்கிரனின் வெளிமண்டலத்தில் 90 வீத கரியமில வாயுவும் 0.5 முதல் 1.5 வரை பிராணவாயுவும் 1 0.8 வீத நீராவியும் உள்ளதாம். பூமியிலுள்ள சீவராசிகள் எதுவும் அங்கு வாழ முடியாது. ஏனெனில் சுக்கிரனின் சீதோஷ்ணம் 270 பாகையாம்.

## மரண அறிவித்தல்

**கந்தையா சண்முகம்**

வட்டுக்-கிழக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த கந்தையா சண்முகம் (கட்டட ஒப்பந்தக்காரர்) 7-9-69 ஞாயிற்றுக்கிழமை பகல் 12-00 மணிக்குக் காலமானார். இவர் மாணிக்கத்தின் அருமைக் கணவரும், சுகாதாரப்பகுதியைச் சேர்ந்த லோகேஸ்வரன் (Inspector of Works), தங்கரத்தினம், செல்வரத்தினம், அழகரத்தினம், பாக்கியரத்தினம் ஆகியோரின் தந்தையாரும், ஆ. புண்ணியமூர்த்தி(அரசினர் ஆயுர்வேத வைத்தியர்) கி. வேலாயுதம்பிள்ளை (கட்டட ஒப்பந்தக்காரர்), பொ. தெய்வேந்திரம் (உரிமையாளர் மு. பொன்னம்பலம் அன் சன்ஸ் நகைவியாபாரி), வே. பொன்னம்பலம் (உரிமையாளர் பாக்கியரத்தினம் ஹாட்வயர்ஸ் ரோஸ்), ஆகியோரின் மாமனாரும், ஆ. நல்லதம்பி (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)யின் அருமை மைத்துனருமாவர். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 8-9-69திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு நடைபெற்றன. 1738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org